விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 127 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 12 வெள்ளிக்கிழமை (25.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


பெங்களூரு வெற்றி பக்கம் 4

தேர்தலை முன்னிட்டு

## எதிர்வரும் 5, 6ஆம் திகதிகள் பாடசாலைகளுக்கு விடுமுறை

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள 2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாட சாலைகளுக்கும் எதிர்வரும் 05 மற்றும் 06ஆம் திகதிகளில் விடு முறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விடுமுறை வழங்கப்பட்ட அனைத்துப் 15ஆம் பக்கம் பார்க்க

## வட்டுக்கோட்டைப் பெண் கொழும்பில் படுகொலை

### 10 வருடங்களின் பின்னர் குற்றவாளிக்கு நீதிமன்றால் மரணதண்டனை விதிப்பு

(கொழும்பு)

கடந்த 2015ஆம் ஆண்டு யாழ்ப் பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் ஒரு வர் கொழும்பில் படுகொலை செய்யப் பட்ட வழக் 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை வறுமைக்கு தள்ளப்படலாம்

### உலக வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மீண்டும் வறுமை நிலைக்குத் தள் ளப்படலாம் என உலக வங்கி எச்சரிக்கை விடுத் துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் ஒரு நிலையான தன்மையை எட்டியுள்ளதெனக் கருதப்பட்டாலும், மக்கள் தொகையில் மூன் 15ஆம் பக்கம் பார்க்க

ஊழல் செய்த அனைவர் மீதும்

# பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுப்போம்

### வவுனியாவில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(வவுனியா)

மக்கள் பணத்தை ஊழல் செய்த அனைவர் மீதும் பாரபட்சம் இன்றி நட வடிக்கை எடுப்போம் என விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

அச்சுவேலியில்

## இரண்டு நாள் காய்ச்சல் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் இரண்டு நாள் காய்ச்சல் காரண மாக குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமடைந் துள்ளார்.

இதில் அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அப்புத்துரை கருணா கரன் (வயது-57) என்பவரே 15ஆம் பக்கம் பார்க்க

## நவம்பர் மாத நடுப்பகுதியில் உயர்தரப்பரீட்சை

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைகள் நவம் பர் மாத நடுப்பகுதியில் ஆரம் பமாகவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 20ஆம் 15ஆம் பக்கம் பார்க்க

## தெற்கைப் போல் வடக்கிலும் இனவாதிகள்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(வவுனியா)

வடக்கில் நிலங்களை விடுவிக்கும்போது தெற்கி லுள்ள இனவாதிகளுக்குக் கஷ்டமாக இருக்கும். அதே போல் வடக்கிலும் இனவாதி கள் உள்ளனர் என அமைச் சர் பிமல் ரத்நாயக்க தெரி வித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இடம் பெற்ற மக்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர், நான்கு மாதங்களில் ஒரு அப்பக்கடையைப் போடுவதே கடினம். நாங்கள் ஆனை யிறவு உப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளோம். அது இங்குள்ள இனவாதிகளுக்கு பெரும் சிக்கலாக உள்ளது.

உப்புப் பைக்கற்றில் பெயர் பி ழை 16ஆம் பக்கம் பார்க்க

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்று

(கொழும்பு)

கடந்த 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான 15ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் மூளும் அபாயம்



(டில்லி)

ஜம்மு - காஸ்மீர் பஹல்கம் தாக்குதலையடுத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் மூளும் அபா யம் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜம்மு-காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாதத் தாக்கு தலையடுத்து இந்தியா - 16ஆம் பக்கம் பார்க்க

பாடசாலைகள்

## 3ஆம் தவணை ஆரம்பமாகும் திகதிகளில் மாற்றம்

(கொழும்பு)

அரச பாடசாலைகள் மற் றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான கற் றல் செயற்பாடுகள் ஆரம்ப மாகும் திகதிகள் மாற்றம் செய் யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை யினை குறித்த காலப்பகுதி யில் நடத்தத் திட்டமிட்டுள்ள மையாலேயே குறித்த மாற் றம் இடம்பெற்றுள்ளதாக தெரிய 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் அரசியல்வாதிகள் செல்வதற்கு இடம் இல்லாமல் அஞ்சுகின்றனர்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கண்டி)

**ஊழல் அரசியல்வாதிகள் செல்வதற்கு இடம் இல்லாமல் இன்று அஞ்சுகின்றனர் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

**கண்டி மாவட்டத்தின் தெல்தெனியப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை (24) நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வேறு ஒரு யுகத்திற்கு இந்த நாட்டைக் கொண்டு செல்வதற்குத் தேவையான திட்டத்தை அரசாங்கம் தயாரித்து, முகாமைத்துவம் செய்து, செயற்படுத்தி வருகிறது. நாடு எப்படிப்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

நாட்டின் பொருளாதாரம் இன்று ஒரு குறிப்பிட்ட நிலையை எட்டியுள்ளது. ஊழல் மற்றும் வீண்விரயம் ஒழிக்கப்பட்டுள்ளது. எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாத வகையில் மிகவும் கவனமாகச் செயற்பட்டு புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க நாங்கள் பாடுபட்டுவருகிறோம்.

இப்போது உங்களுக்கு ஜனாதிபதி பதவியும் மிகவும் சக்திவாய்ந்த அரசாங்கத்தை நிறுவும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது, உங்களுக்கு இன்னும் என்ன தேவை? என்று நீங்கள் நினைக்கலாம். உங்களுக்குத் தெரியும் ஒரு நாட்டை ஆட்சி செய்யும் போது பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. ஒரு ஜனநாயக நாட்டில் அனைத்து மட்டங்களிலும் மக்களின் பிரதிநிதித்துவம் அவசியம்.

அந்த முக்கியத்துவத்தின் காரணமாகவே, முன்னைய அரசாங்கம் 2023 இல் நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவில்லை. ஏனென்றால், கிராமம் வளர்ச்சியடைந்தால், கிராமத் தலைமை மாற்றமடைந்தால், கிராமத்திலிருந்தே அரசியல் கலாசாரம் மாறத் தொடங்கினால், அந்த ஊழல் அரசியல்வாதிகளுக்குச் செல்வதற்கு எங்கும் இடம் கிடையாது என்பதை அவர்கள் அறிவார்கள். அந்தப் பயத்தில்தான் அன்றைய அரசாங்கம் எங்கள் மீது குற்றம் சாட்டியது. கிராமத்திலிருந்து ஆரம்பிக்கவிருந்த எங்கள் பயணத்தை அவர்கள் தடுக்க முயன்றனர்.

இவ்வளவு காலமாக வரவு செலவுத்திட்டம் என்பது வெறும் காகிதத் துண்டாகவே இருந்தது. அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியின் விருப்பப்படி விடயங்கள் நடந்தன. பணம் செலவழிக்கப்பட்டது. கொள்கைப் பிரகடனத்தில் உங்களுக்கு வழங்கப்பட்ட திட்டத்தைப் பார்த்து, அந்தத் திட்டத்தின் மூலம் இந்த ஆண்டு செயற்படுத்த வேண்டிய விடயங்களை அடையாளம் கண்டு, அதன்படி அடுத்த எட்டு மாதங்களுக்கான வரவுசெலவுத்திட்டத்தை நாங்கள் சமர்ப்பித்துள்ளோம்.

2024க்கு முன்பிருந்தே நாம் சொன்னோம் நாட்டை எம்மிடம் ஒப்படையுங்கள் என்று. அப்போதிருந்து, எங்கள் முன்னுரிமைகள் என்னவென்று உங்களுக்குத் தெரியும். எமது முன்னுரிமைகள் என்ன? நாம் சுகாதார முறைமையை மேம்படுத்த வேண்டும். மக்கள் தங்கள் கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார சேவைகளை எளிதாகப் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். நாம் படிப்படியாக முன்னோக்கிச் செல்லும் ஒரு சுகாதார முறைமையை உருவாக்க வேண்டும். நாம் கல்விக்கு முன்னுரிமை அளிக்கிறோம். ஒவ்வொரு கிராமப் பிரிவிலிருந்தும் மூன்று கிலோமீற்றர் சுற்றளவில் ஒரு முழுமையான வசதிகளுடன் கூடிய ஆரம்பப் பாடசாலையை அமைக்க வேண்டும் என்றார். (ம-4,7)

# வடக்கை அபிவிருத்தி செய்வோம் இனி கனடா சென்று கஷ்டப்பட வேண்டாம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(வவுனியா)

வடக்கு மாகாண இளைஞர்கள் இனியும் கனடா சென்று பணியில் கஷ்டப்படத் தேவையில்லை. நாம் வடக்கினை அபிவிருத்தி செய்வோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர், காணாமல் ஆக்கப்பட்ட ஒரு மகன் மீண்டும் கிடைத்தது போல் வடக்கு மாகாணம் எமக்குக் கிடைத்துள்ளது.

அதனை நாங்கள் அன்போடு பாதுகாப்போம். வடக்கை வளப்படுத்த எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்திசெய்வோம். அங்கு கொழும்பில் இருந்து ஆட்களை வேலைக்கு அமர்த்த நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

கைத்தொழிற்பேட்டைகளை உருவாக்குவோம். காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பகுதிகளில் அவை அமையவுள்ளன.

அதன் பின்னர் உங்களது உறவுகளுக்குச் சொல்லுங்கள் கனடா சென்று பணியிலே கஷ்டப்படும் நிலை மாறும். நாங்கள் இந்த அரசைப் பொறுப்பெடுத்து 5 மாதங்களே ஆகின்றன. ரணில் இந்த நாட்டை ஆண்ட போது டொலரின் பெறுமதி காலை ஒரு விலையிலும், மாலை ஒரு விலையிலும் இருந்தது.

இன்று அதில் ஒரு ஸ்திரத்தன்மை காணப்படுகின்றது.

உங்கள் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்வதற்குக் கொஞ்சக்காலம் எடுக்கும் என்றார். (ம-4,7)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் மாணவியின் சடலம் ஒப்படைப்பு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் மாணவி ஒருவரின் சடலம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பகுதியில் விபரீத முடிவெடுத்த குறித்த மாணவி உயிரிழந்த நிலையில் அவரது சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாணவியின் உயிரிழப்பு தொடர்பில் மேலதிக தகவல் வெளிவராத நிலையில் பொலிஸ் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-4,7)

# கிளிநொச்சியில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இரணைமடு சந்தி சிவன் கோவிலுக்கு முன்பாகவே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் கிளிநொச்சி பாரதிபுரத்தினைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)


இளங்கலைஞர் மன்றம் நல்லூர்

மாதாந்தக் கலையரங்கு

காலம் : 27.04.2025.
நேரம் : பி.ப .04.30. மணி.
இடம் : இளங்கலைஞர் மன்றம், நல்லூர்.

நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- குழு வயலினிசை - வயலின் – இளங்கலைஞர் மன்ற மாணவர்கள்
  அனிசெய் கலைஞர்கள்
  மிருதங்கம் – திரு. ம. லோகேந்திரன்
  கெஞ்சிரா – திரு. க. தஷானன்
  கடம் – திரு. சோ. சிவயெனன்
  நெறியாள்கை : திரு. கு. சயந்தன்
- குழு இசை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள்
  அனிசெய் கலைஞர்கள்
  வயலின் – கே. வேலதீபன்
  மிருதங்கம் – திரு. ம. லோகேந்திரன்
  கெஞ்சிரா – திரு. பு. வேணுகாந்தன்
  புல்லாங்குழல் – திரு. சி. யூட்
  நெறியாள்கை : கலாநிதி (திருமதி) கிருபாசக்தி கருணா
- இரட்டைவயலின் இசையரங்கு - வயலின் – திரு. ப. சியாம்
  அனிசெய் கலைஞர்கள்
  மிருதங்கம் – திரு. அ. சண்முகப்பிரியன்
  கடம் – திரு. மு. சுலக்சன்
  கெஞ்சிரா – திரு. க. நந்தகுமார்
  முகர்சிங் – திரு. நி. மோகனதர்ஷன்





அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்,
நிர்வாக சபை,
இளங்கலைஞர் மன்றம் - நல்லூர்

(C-2790)



கண்ணீர் அஞ்சலி



அமரர் சரகணபவன் உமாசுதன்
( பரீட்சைக்குழு உறுப்பினர் – FWC )

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபரும் தொண்டைமானாறு வெளிக்கள நிலைய பரீட்சைக்குழு உறுப்பினருமாகிய அமரர் சரகணபவன் உமாசுதன் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்கின்றோம்.

தேசிய வெளிக்கள நிலையம், தொண்டைமானாறு

(C-2795)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைக்கவசத்துடன் நடமாடினால் இனிச் சிக்கல்

## விடுக்கப்பட்ட எச்சரிக்கை

(கொழும்பு)

**பாதுகாப்புத் தலைக்கவசம் அணிந்து சந்தேகத் திற்கிடமான முறையில் நடந்து கொள்ளும் நபர்களைச் சோதனையிடுமாறு பொலிஸாருக்கு அறிவித்தல் விடுக்கப்படுள்ளது.**



குறித்த உத்தரவைப் பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைகள் உள்ளிட்ட பல குற்றங்களைச் செய்த சந்தேகநபர்கள் தலை மற்றும் முகங்களை மறைக்கும் வகையில் தலைக்கவசங்களை அணிந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் செல்லும் போதே தலைக்கவசம் அணிவது கட்டாயம் என்றாலும், அது சாரதி மற்றும் பின்னால் அமர்ந்திருப்பவரின் பாதுகாப்பிற்காக மட்டுமே.

எனவே, மோட்டார் சைக்கிளில் பயணிக்காத போது பாதுகாப்புத் தலைக்கவசம் அணிந்து சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொள்வது கண்டறியப்பட்டால், அந்த நபரையும் அவரது உடைமைகளையும் ஆய்வு செய்யுமாறு அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-8)

## பாடசாலை மாணவர்களுக்கு

# போசாக்கு உணவு

## அரசு நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கும் போசாக்கு உணவை வழங்கும் கொள்கைத் திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்த அரசாங்கம் முடிவு எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்தார்.

குறித்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பங்குதாரர்களுடனும் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

பாடசாலை மாணவர்களிடையே இரத்த சோகையைக் குறைக்கும் நோக்கில், உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் போசாக்கான உணவுகளை வழங்கும் திட்டம் அமுல் படுத்தப்படுகிறது. (நி-8)

# வெள்ளி, சனி, சந்திரனை காண அரிய வாய்ப்பு

(கொழும்பு)

வெள்ளி, சனி, சந்திரன் ஆகிய கோள்கள் மிக அருகில் தோன்றும் அரிய காட்சியை நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கை மக்களுக்கு காணக்கூடிய வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் கிழக்கு வானில் இந்த அரிய காட்சியைக் காணமுடியும் என கிரகவியல் ஆய்வாளர் அனுர சி.பெரேரா தெரிவித்துள்ளார்.

அதன்படி, மக்கள் அந்தக் காட்சியை வெற்றுக் கண்களால் பார்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உள்ளூரு' தேறிய 'பெங்களூரு'

## நெருங்கி வந்து வெற்றிக் கனியை தட்டிவிடுகிறது ராஜஸ்தான்





இந்தியன் பிரீமியர் போட்டியில் உள்ளூரில் (சொந்தமண்) தொடர்ந்து ஏமாற்றிய பெங்களூரு, நேற்றைய போட்டியில் கடைசி ஓவரில் 11 ஓட்டங்களால் ராஜஸ்தான் அணியை வீழ்த்தி அவமானங்களை எல்லாம் வெகுமானமாக மாற்றியது.

பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நேற்றிரவு நடந்த பிரீமியர் லீக் போட்டியில் பெங்களூரு, ராஜஸ்தான் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித்தலைவர் ரியான் பராக், பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**கோலி அபாரம்**

பெங்களூரு அணிக்கு பில் சால்ட், விராட் கோலி ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. ஜோப்ரா ஆர்ச்சர் வீசிய 3வது ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்தார் கோலி. துஷார் தேஷ்பாண்டே வீசிய 5வது ஓவரில் சால்ட் 2, கோலி ஒரு பவுண்டரி விரட்டினர். முதல் விக்கெட்டுக்காக 61 ஓட்டங்கள் சேர்த்த போது ஹசரங்க பந்தில் சால்ட் (26) ஆட்டமிழந்தார். சந்தீப் சர்மா வீசிய 12வது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரிகள் அடித்த கோலி, 32 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். துஷார் தேஷ்பாண்டே வீசிய 15வது ஓவரில் 2 சிக்சர் அடித்த தேவ்தத் படிக்கல், 26 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். இரண்டாவது விக்கெட்டுக்கு 95 ஓட்டங்கள் சேர்த்த போது ஆர்ச்சர் "வேகத்தில்" கோலி (70) வெளியேறினார்.

சந்தீப் சர்மா வீசிய 17வது ஓவரில் படிக்கல் (50), அணித் தலைவர் ரஜத் படிதர் (1) ஆட்டமிழந்தனர். ஆர்ச்சர், பரூக்கி பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்த டிம் டேவிட், சந்தீப் சர்மா பந்தை சிக்சருக்கு அனுப்பினார். டிம் டேவிட் (23) "ரன்-அவுட்" ஆனார்.

20 ஓவர்கள் நிறைவில் பெங்களூரு அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களை எடுத்தது. ஜிதேஷ் சர்மா (20) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ஜெய்ஸ்வால் அசத்தல்:**

சவாலான இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு யாஷஸ்வி ஜெய்ஸ்வால், வைபவ் சூர்யவன்ஷி ஜோடி ஆரம்பம் கொடுத்தது. புவனேஷ்வர் குமார் வீசிய முதல் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ஜெய்ஸ்வால், யாஷ் தயாள் வீசிய 2வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். தொடர்ந்து அசத்திய ஜெய்ஸ்வால், ஹேசல்வுட் வீசிய 4வது ஓவரில் "ஹட்ரிக்" பவுண்டரி விரட்டினார். முதல் விக்கெட்டுக்காக 52 ஓட்டங்கள் சேர்த்தபோது புவனேஷ்வர் பந்தில் சூர்யவன்ஷி (16) ஆட்டமிழந்தார்.

ஹேசல்வுட் வீசிய 6ஆவது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த ஜெய்ஸ்வால் (49), அரைச்சத வாய்ப்பை இழந்தார். "பவர்-பிளே" ஓவரின் முடிவில் ராஜஸ்தான் அணி 72/2 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷெப்பர்ட், சுயாஷ் சர்மா பந்தில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்ட அணித் தலைவர் ரியான் பராக் (22), குர்ணால் பாண்ட்யாவிடம் சரணடைந்தார். தொடர்ந்து அசத்திய குர்ணால் "சுழலில்" நிதிஷ் ராணா (28) சிக்கினார்.

**ஜூரெல் ஆறுதல்:**

சுயாஷ் சர்மா, குர்ணால் பந்தில் தலா ஒரு சிக்சர் விளாசினார் துருவ் ஜூரெல்.

ஹேசல்வுட் "வேகத்தில்" ஹெட்மயர் (11) "பவிலியன்" திரும்பினார். புவனேஷ்வர் வீசிய 18வது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்த துருவ் ஜூரெல் (47), ஹேசல்வுட் பந்தில் ஆட்டமிழந்தார். ஜோப்ரா ஆர்ச்சர் "டக்-அவுட்" ஆனார். கடைசி ஓவரில் வெற்றிக்கு 17 ரன் தேவைப்பட்டது. யாஷ் தயாள் பந்துவீசினார். முதல் பந்தில் ஷூபம் துபே (12) அவுட்டானார். மூன்றாவது பந்தில் ஹசரங்க (1) "ரன் அவுட்" ஆனார். இந்த ஓவரில் 5 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது.

ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. பருக்கி (2), தேஷ்பாண்டே (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

(ம-4,7)

**இது அதிகம்**

இந்தியன் பிரீமியர் லீக் அரங்கில் ராஜஸ்தானுக்கு எதிராக தனது அதிகபட்ச ஸ்கோரை (205/5) பதிவு செய்தது பெங்களூரு. இதற்கு முன், 2015ல் பெங்களூருவில் நடந்த போட்டியில் 200/7 ஓட்டங்களை எடுத்திருந்தது.

## தாக்குதலில் இறந்தவர்களுக்கு ஐ.பி.எல் வீரர்கள் அஞ்சலி




பஹல்காமில் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் வீரர்கள் கறுப்புப் பட்டை அணிந்து விளையாடினர்.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர். இதில் 26 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் நடைபெற்ற ஐ.பி.எல் 41 ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத், மும்பை இந்தியன்ஸ் அணி வீரர்கள் கறுப்புப் பட்டை அணிந்து விளையாடினர்.

மேலும், போட்டி தொடங்கும் முன்பு தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ) செய்திருந்தது. மேலும், போட்டியின் முடிவில் பயன்படுத்தப்படும் பட்டாசு வெடிக்கும் கொண்டாட்டங்கள், ரசிகர்களை உற்சாகப்படுத்தும் சியர் லீடர்களுக்கும் தடை விதிக்கப்பட்டது.


(6-8)

## கம்பீருக்கு கொலை மிரட்டல்

பா.ஜ.க முன்னாள் எம்.பியும், இந்திய அணியின் தற்போதைய தலைமை பயிற்சியாளருமான கௌதம் கம்பீர் தனக்கு மின்னஞ்சல் மூலம் கொலை மிரட்டல் வந்துள்ளதாக டில்லியில் உள்ள ராஜீந்தர் நகர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

குறித்த புகாரில் 'ஐ.எஸ்.ஐ.எஸ் காஷ்மீர்' என்ற அமைப்பிடம் இருந்து தனக்கு கொலை மிரட்டல் வந்துள்ளதாக கம்பீர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இது தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்ய வேண்டும் எனவும் அவர் அப்புகாரில் குறிப்பிட்டுள்ளார்.



கம்பீருக்கு இதற்கு முன்னர் 2021 ஆம் ஆண்டும் இதுபோன்ற மிரட்டல்கள் வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

## இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம் முறைசாராக் கல்விப் பிரிவினால் 2025 ஆம் ஆண்டிற்கான தையல், அழகுக்கலை, சிகையலங்காரம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த பயிற்சி நெறிகளுக்கு தகுதியுடைய போதனாசிரியர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 2025.05.08 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப்பிரிவில் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-8)


# நாளை சனிக்கிழமை
## தேசிய துக்க தினமாக பிரகடனம்

(கொழும்பு)

நாளை 26 ஆம் திகதி இலங்கையில் தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை 26 ஆம் திகதி நடைபெறவுள்ளதால் அன்றைய தினத்தை இலங்கையில் தேசிய துக்க தினமாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது

இது தொடர்பில் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.



மேலும் அந்த அறிக்கையில் அனைத்து அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-8)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட கைமரங்கள், சீற், கதவுகள், தீராந்தி மற்றும் ஏனைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது.

**காலம் :- 09.05.2025 வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணி**
**இடம் :- தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

**நிபந்தனைகள்**


1. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 2000.00 இனையும், மீளளிக்க முடியாத படிவக் கட்டணமாக ரூபா 500.00 இனையும் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய கட்டணங்கள் செலுத்தாதோர் ஏல விற்பனையில் பங்குபற்ற முடியாது.
2. விண்ணப்பப்படிவம் 2025.05.09 ஆம் திகதி மு.ப.8.30 மணி தொடக்கம் மு.ப 10.00 மணி வரை வழங்கப்படும். அதன் பின்னர் எக்காரணம் கொண்டும் விண்ணப்பப்படிவம் வழங்கப்படமாட்டாது.
3. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையின் முழுத் தொகையையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
4. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினையும் அதன் விபரத்தினையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அனுமதி பெற்று பார்வையிட முடியும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 021 205 8986 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

**2025.04.25**

(அ-2792)

# பாப்பரசரின் திருவுடலுக்கு மக்கள் இறுதி அஞ்சலி



(வத்திக்கான்)

நித்திய இளைப்பாறுதல் அடைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் திருவுடலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் திருவுடல் வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை அந்நாட்டு நேரப்படி காலை 10 மணிக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் நல்லடக்க ஆராதனை இடம்பெறவுள்ளது. (நி-8)

# இராசிபலன்

25.04.2025
சித்திரை 12, வெள்ளிக்கிழமை
துவாதசி முற்பகல் 8.35 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 4.23 மணிவரை

சுபநேரம் 6.00-7.30 மணிவரை
இராகுகாலம் 10.30-12.00 மணிவரை
பிரதோச விரதம்,
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்-
பூரம்

**வளவன்**




தொழில் ரீதியாகப் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்,சயனசுகக் குறைவான நாள்.




பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.




பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு.




வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் உற்சாகம் கூடும் நாள்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், தேக நலனில் அதிக கவனம் தேவை.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், புதிய முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.




நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும் நாள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.




தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை கூடும், போசன சுகமுண்டு.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்களின் நட்புக் கிடைக்கும், பக்குவமாக நடந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கடந்தவை கசப்பான நிகழ்வு எனில் அதை மீண்டும் ருசிக்க நினைக்காதே.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளையோர் சமூகத்தில் சமூகப்பிறழ்வு அதிகரிப்பு

## கலைகளூடாக கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**இன்றைய இளையோர் மத்தியில் சமூகப் பிறழ்வு அதிகரித்துச் செல்கிறது. இதே நிலைமையைத் தொடர்வதற்கு அனுமதிப்பது ஆபத்தானது என வடக்கு மாகாண ஆளுநர். நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

கலைகள் ஊடாக இளையோரை, மாணவர்களை வழிப்படுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் ஆராயும் முதல்கட்டக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இளையோருக்குப் பொழுது போக்குவதற்கான நேரமும் குறைவாகவுள்ளது. மாணவர்கள் பாடசாலை முடிந்த பின்னர் தனியார் கல்வி நிறுவனங்கள் என்று ஓடிக் கொண்டேயிருக்கின்றனர்.

தங்களுக்குக் கிடைக்கும் நேரத்திலும் கைத்தொலைபேசியில் மூழ்க்கிக் கிடக் கின்றனர். இதே நிலைமை யைத் தொடர்வதற்கு அனுமதிப்பது ஆபத்தானது. கலைகள், விளையாட்டுக்கள் ஊடாகவே இந்த நிலைமையை மாற்ற முடியும் என என்னைச் சந்தித்த பலர் குறிப்பிட்டதாக ஆளுநர் தெரிவித்தார்.


இதன் பின்னர் கலைத் துறையின் மூத்த கலைஞர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள் எனப் பல்வேறு தரப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்து கொண்டவர்கள் குறித்த செயற்பாடுகளை ஆரம்பிப்பது பொருத்தமானது என கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பாடசாலைகளில் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உள்ள மட்டுப்பாடுகள் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தெளிவுபடுத்தினார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர், முதல்கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 2 பாடசாலைகள் வீதம் தெரிவு செய்து இதனை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து அந்தப் பரீட்சார்த்த முயற்சியின் அடிப்படையில் ஏனைய பாடசாலைகளில்நடைமுறைப்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டார். முன்னோடித் திட்டத்துக்கான பாடசாலைகளை சட்டமருத்துவ அதிகாரி மற்றும் கல்வி அமைச்சின் செயலர் ஆகியோர் அடையாளப்படுத்துவது என்றும் இதன்போது தீர் மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணக்கல்விஅமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப் பாளர், வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். (6-8)

# ரூ.10 இலட்சம் பெறுமதியான 4 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம் இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று வியாழக்கிழமை காலை கிளாலிப் பகுதியில் உள்ள பற்றைக் காணி ஒன்றினுள் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 4கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளாலிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு அருகாமையில் உள்ள காணி ஒன்றில் இருந்தே மேற்படி இரண்டு கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினர் அதனைப் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்கள் தப்பித்துள்ள நிலையில் அது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-30)

# நாவாந்துறை சென்.நீக்கிலார் ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத் திருவிழா கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் திருப்பலிகள் நடைபெற்று வருகின்றன.

இந் நிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை நற்கருணை விழா மாலை 5.30 மணிக்கும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு திருவிழா திருப்பலியும் மாலை 5.30 மணிக்கு திருச்சுருப தேர்ப் பவனியும் இடம் பெறவுள்ளது என நாவாந்துறைப் புனித நீக்கிலார் ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (6-8)

# மலேரியா தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு

(நெளுக்குளம்)

மலேரியா தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு சிரமதானம் நேற்று முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய மலேரியா தடை இயக்கத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் தயானந்தறூபன் தலைமையில் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் மலேரியா தடுப்பு இயக்கத்தின் ஊழியர்களால் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் குறித்த சிரமதானப் பணி மூலம் புதுக்குடியிருப்பு நகரைச் சுத்தப்படுத்தியதோடு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வர்த்தகர்கள், பயணிகள், பாடசாலை மாணவர்கள் என பலருக்கும் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டிருந்தது.

இலங்கையில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம் உள்ளமையைத் தெளிவுபடுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்வாக, புதுக்குடியிருப்பில் இடம்பெற்றிருந்தது. (6-8-299)



அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கிவரும் சாரா இன்டஸ்றீஸ் நிறுவனத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநரினால் நடுகை செய்யப்பட்டது.

# திருவுருவச்சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ பொன் பரமானந்தர் மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் பொன். பரமானந்தரின் திருவுருவச்சிலை திறப்பு விழா பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் க. வசந்தரூபன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சிவபூமி அறக்கட்டளை மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.முரளீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

# யாருக்காக அழுதான்? திரைப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் ஏற்பாட்டில் ஜெயகாந்தன் நெறியாள்கையில் உருவான யாருக்காக அழுதான்? திரைப்படக் காட்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ். தந்தைசெல்வா கலையரங்கில் திரையிடப்படவுள்ளது.

எழுத்தாளர் ஜெயகாந்தன் [illegible] எமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# செம்மணிப் படுகொலை நினைவு முற்றம் உருவாக்கப்படும்

## ஆவண வெளியீட்டில் தமிழ்தேசிய பேரவை

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த பேரவலங்களை எதிர்கால சந்ததியினருக்குக் கடத்தும் வகையில் செம்மணிப் படுகொலை நினைவு முற்றம் உருவாக்கப்படுவதோடு தமிழின வரலாற்றுடன் தொடர்புடைய விடயங்கள் புனரமைக்கப்படும் என தமிழ்தேசியப் பேரவை தெரிவித்துள்ளது.

தமிழ்தேசியப் பேரவை உள்ளூராட்சிச் சபை தேர்தல் யாழ்.மாநரகசபைக்கான முன்மொழிவுகள் செயற்றிட்ட ஆவணம் நேற்று வெளியிடப்பட்டது.இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எமது ஆட்சிக்காலத்தில் மாநகரசபைக்காக மக்கள் என்ற எண்ணம் நீக்கப்பட்டு மக்களிற்காகவே மாநகரசபை என்ற எண்ணம் உருவாக்கப்பட்டு மக்களிற்கான சேவைகளிற்கே முதன்மையளிக்கப்படும்.

கழிவகற்றல் மின்விளக்கு பொருத்தல் குடிநீர் தொடர்பான சேவைகள் முறைப்பாட்டுப் பெறுதல்கள் டிஜிற்றல் முறையில் இலகுபடுத்தப்படுவதுடன், சோலை வரி உட்பட ஏனைய சேவைகளும் டிஜிற்றல் முறையில் இலகுபடுத்தப்படும்.

குடிநீர் தட்டுப்பாடு நிலவும் அனைத்து பிரதேசங்களிலும் நீர் விநியோக செயற்பாடு முன்னெடுக்கப்படுவதுடன் மழைநீர் சேகரிப்புத் திட்டமும் விரிவாக முன்னெடுக்கப்படும்.

மாநகரசபையின் வருமானங்கள் மற்றும் அரச அரச சாரத நிதிகள் உரிய முறையில் திட்டமிடப்பட்டு, நிலையான அபிவிருத்தியை நோக்கி இலஞ்சம் ஊழல் அற்ற பொறுப்புக் கூறல், வெளிப்படைத் தன்மை கொண்ட நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவதற்கு சைக்கிள் சின்னத்திற்கு மக்களின் ஏகோபித்த ஆணை அமையட்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8-33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றில் ஒன்றை ஒப்படையுங்கள்
## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயலாளர் புதிய அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகள் தங்களின் பயன்பாட்டுக்கென இரண்டு வாகனங்களை மட்டும் வைத்துக் கொண்டு மேலதிக வாகனங்களை அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்குமாறு குறித்த அறிவுறுத்தல் மூலம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகள் தரப்பில் இருந்து எதுவித பதிலும் வெளிப்படுத்தப்படவில்லை என்றும் தெரிய வந்துள்ளது. (நி-8)

# வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்
## வத்திக்கானுக்கு விஜயம்

(கொழும்பு)

நித்திய இளைப்பாறுதல் அடைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிக் கிரிகைகளில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று வெள்ளிக்கிழமை வத்திக்கானுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். (நி-8)



# மதுபோதையில் சாரத்தியம்
## வேட்பாளர் கைது

(கொழும்பு)

மதுபோதையில் முச்சக்கரவண்டியை செலுத்திச் சென்றதாக கூறப்படும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கினிகத்தேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கினிகத்தேனை பொலிஸார் இரவு நேர சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது நுவரெலியா - கினிகத்தேனை பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றை சோதனையிட்டுள்ளனர்.

சோதனையில், முச்சக்கர வண்டியின் சாரதி மதுபோதையில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து முச்சக்கர வண்டியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், முச்சக்கரவண்டியின் சாரதி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் எனத் தெரிய வந்துள்ளது. (நி-8)


மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி. ஸ்ரீரஜனி தவரட்ணம்

(SLTS-I) சங்கீதம்

சேவை விபரம்



- முல்/அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயம் (11.01.1993–31.05.1995)
- முல்லைத்தீவு மகாவித்தியாலயம் (01.06.1995–03.01.1999)
- முல்/ஆனந்தபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை (04.01.1999–08.02.2005)
- முல்/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி (09.02.2005–01.01..2018)
- முல்/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் (02.01.2018–24.04.2025)

எமது பாடசாலையில் சங்கீத பாட ஆசிரியராக கடமையாற்றி 24.04.2025 அன்று ஓய்வுபெற்றுச் சென்ற மணிவிழா நாயகி திருமதி. ஸ்ரீரஜனி தவரட்ணம் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்.
முல்/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

(C-2791)


# பொற்கலை வெளியீடும் பொன்விழா நிகழ்வுகளும்



ச.மார்க்கண்டு,
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

மருதத்தின் பயனும், முல்லையின் முறுவலும், நெய்தலின் தழுவலும் சங்கமிக்கும் நன்னிலம் யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தின் மத்தியிலிருந்து பலாலி வீதி வழி பரமேஸ்வரா அடைந்து மேற்கு நோக்கிய இராமநாதன் வீதியின் வலப்புறத்தில்100மீற்றர் தூரத்துள் அமைந்ததே யாழ்.பல்கலைக் கழகமாகும்.

சேர்.பொன்.இராமநாதன் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரியே, 1974 இல் யாழ்.வளாகமாகத் தோற்றுவிக்கப்பட்டு, 1978 இல் பல்கலைக்கழகமாய்ப் பரிணமித்தது. இராமநாதன் மண்டபத்தையொட்டிக் கலைப்பீடச் செயற்பாடும் சற்று மேற்கில் விஞ்ஞானபீட விளைச்சல்களும், திருநெல்வேலிச் சந்தியின் மேற்கே-ஆடியபாதம் வீதியில்- மருத்துவபீட உயிர்க் கற்கைகளும், மருதனார்மடச் சந்தியை அண்மித்து நுண்கலைபீடக் கவின் கலைகளும் கைதடிப் பகுதியில் சித்தமருத்துவ பீட நோய்த் தடுப்பு முயற்சியும் என்றவாறின்று, பரந்துவிரிந்து பல்துறைக் கற்கைப் பிரிவுகளோடு விழுதெறிந்து நிமிர்ந்துளது! அறிவுக் கருவூலமான நூலகத்தையும் விளையாட்டுத் திடல்களையும் தன்னகங் கொண்டு, பல்கலைக்கழகம் கிளைவிரித்து மலர்கிறது.

கலைப்பீடச் செல்நெறிகள் ஐம்பது அகவையைக் கடந்து சிலிர்க்கின்றன! இயலிசை நாடகம், ஏற்றமுறு கல்வி, பூகோள சாத்திரங்கள், வரலாற்றுத் தொன்மங்கள், பொருளியல் ஆய்வுகள், சட்டவாக்க முறைமைகள், சமயங்களின் கூறுகள் என்றவாறு, விரிந்துபரந்து விழுதோச்சும் துறைகளால், விண்புகழ் கிளைபரப்ப விளைகிறது கலைப் பீடம்! கலைப்பீட வளர்ச்சியைக் கவினுறக் காட்டுதற்கும், பொன் விழாக் கொண்டாடிப் போற்றி மகிழ்



வதற்கும், தடங்களைப் பதிவாக்கித் தரணியில் நிமிர்வதற்கும் பழைய மாணவர் ஒன்றுதிரண்டனர்.

ஆனோல்ட் தலைமையில் பௌநந்தி செயலாக்கப் 'பழைய மாணவர் சங்கம்' அமையப்பெற்றது. 78 ஆம் ஆண்டு நுழைகலை மாணவர், சங்க அங்கத்தில் பெரும் பங்காயினர்! ஆதலால், ஆவணமாய் அமை 'மலரின் ஆக்கல்' அந்தப்பிரிவிற்கே அதிகமாய் ஆனது! திரு.அகிலதாஸ் தலைமையில் திரு.அருணகிரிநாதன் செயலாளராக, திருமதி குககுமாரி. வி, செல்வி மு. இரட்ணபூபதி, திரு.தயானந்தராசா, திரு.சேதுராஜா, திருமதி பிறேமா.செ, திரு.குலசபாநாதன், அருட்தந்தை ஜெரோம், பேராசிரியர்கள் திரு.பாலச்சந்திரன்,திரு. புஸ்பரட்ணம், எழுத்தாசிரியர் ஆகியோர் சேர்ந்து 'மலர்க்குழு' ஆயினர். கலைப்பீடத்தின் பொன் விழா மலராதலால் ' பொற்கலை' என, ஓய்வுநிலை ஆசிரியர் இரட்ணபூபதியின் முன்மொழிவை ஆராய்ந்து தேர்ந்தனர்.

அருளாகும் ஆசி, வழிகாட்டும் வாழ்த்து, பல்கலையின் பாதை, பனுவலின் பல்சுவை, கவினுறு கவிதை, அஞ்சலிக்கும் அமரத்துவம், புனைவு சொல்லும் புகைப்படங்கள் ஆகிய குறும்தலைப்புகளுடன் 550 பக்கங்களின்மேல் இதழ்விரிக்கிறது பொற்கலை.

ஆக்கங்களின் பலசெய்திகள் அறியாதவையும், அறிந்து பேணப்பட வேண்டியவையும் ஆகும். மலரிதழ் வருடுவோர் மனங்கொள்வர் இதனை! இவ்வளவு பெரிய 'பொற்கிழி' இலங்கை ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு (2500/-) பெறுமதியில் எதிர்வரும் 26.04. 2025 சனிக்கிழமையன்று கைகளில் தவழ்ந்து கலைக்கோலம் பெறுகிறது.

ஆக,பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் மலர் வெளியீட்டிலும், கௌரவிப்பிலும்: 27.04.2025இல் மேடைக்காகும் கலை நிகழ்வுகளிலும்: 28.04.2025 அன்று 'ராஜா கிறீம் ஹவுஸி'ல் இடம்பெறும் 'உண்டாடல்' மகிழ்விலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் அழைத்து மகிழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாரதம்

# பஹல்காம் தாக்குதல் எதிரொலி

# அறிவிக்கப்பட்டது ராஜதந்திர தாக்குதல்!

**(டில்லி)**

**ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் 26 பேர் கொல்லப்பட்ட கொடிய பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து, பாகிஸ்தானுக்கு எதிராக தொடர்ச்சியான இராஜதந்திர மற்றும் மூலோபாய எதிர் நடவடிக்கைகளை இந்தியா நேற்று முன்தினம் புதன்கிழமை அறிவித்தது. "எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு" எதிரான ஒரு தீர்க்கமான நிலைப்பாடாக இந்திய வெளிவிவகார அமைச்சு பல நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டியது,**



பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய வெளிவிகார அமைச்சு வெளியிட்ட 5 முக்கிய அறிவிப்புகள்:

**01. சிந்து நதி நீர் ஒத்துழைப்பு இடை நிறுத்தம்**

சிந்து நதி அமைப்பிலிருந்து ஆண்டுதோறும் 39 பில்லியன் கன மீற்றர் நீர் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குப் பாயும் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா இடைநிறுத்தியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நதி நீர் பகிர்வை நிர்வகிக்கும் இந்த ஒப்பந்தம், பல வருட மோதல்களுக்கு மத்தியிலும் கூட ஒத்துழைப்பின் அடையாளமாக நீண்ட காலமாகக் கருதப்படுகிறது.

**02. அட்டாரி-வாகா எல்லை மூடல்**

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் மக்களிடையேயான தொடர்புக்கு முக்கியமான இடமான அட்டாரி-வாகா எல்லையில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி உடனடியாக மூடப்பட்டுள்ளது.

செல்லுபடியாகும் ஆவணங்களுடன் எல்லையைக் கடந்தவர்கள் 2025 மே முதலாம் திகதிக்கு முன்பு பாகிஸ்தானுக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**03. சார்க் விசா விலக்குத் திட்டத்தை கட்டுப்படுத்துதல்**

சார்க் விசா விலக்கு திட்டத்தின் கீழ் பாகிஸ்தானியர்கள் இந்தியாவிற்கு பயணம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. முன்னர் வழங்கப்பட்ட அனைத்து விசாக்களும் இரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

ஏற்கனவே நாட்டில் உள்ளவர்கள் வெளியேற 48 மணிநேரம் அவகாசம் வழுங்கப்படுகிறது.

**04.இராணுவ ஆலோசகர்களை வெளியேற்றுதல்**

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் உள்ள பாதுகாப்பு, கடற்படை மற்றும் விமான ஆலோசகர்களை புதுடில்லி ஆளுமையற்றவர்களாக அறிவித்துள்ளது, அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேற ஒரு வாரம் அவகாசம் அளித்துள்ளது.

இது போன்ற நடவடிக்கையில், இஸ்லாமாபாத்தில் உள்ள உயர் ஸ்தானிகராலயத்தில் இருந்து புதுடில்லி தனது சொந்தப் பாதுகாப்பு, கடற்படை மற்றும் விமான அதிகாரிகளையும் திரும்பப் பெறும்.


**05. உயர் ஸ்தானிகராலய ஊழியர்களின் எண்ணிக்கை குறைப்பு**

புதுடில்லியில் தனது இராஜதந்திர பிரசன்னத்தை 30 ஆகக் குறைக்குமாறு பாகிஸ்தானை இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

இது தூதரகத்தின் தற்போதைய செயற்பாட்டுத் திறனை 55 ஆகக் குறைத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் பிற உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட 2.5 மணி நேர பாதுகாப்பு அமைச்சரவைக் குழு (CCS) கூட்டத்திற்குப் பின்னர் பாகிஸ்தானுக்கு எதிரான துணிச்சலான இராஜதந்திரத் தாக்குதல் அறிவிக்கப்பட்டது. (நி-8)

## பாடசாலை மீது இஸ்ரேல் வான் தாக்குதல்
## 45 பேர் உயிரிழப்பு - 100 பேர் காயம்




(காசா)

காசாவில் உள்ள பாடசாலையொன்றின் மீது இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதலில் 45 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவின் ராபா பகுதியைக் குறிவைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதலில் அங்குள்ள இஸ்லாமியப் பாடசாலை உட்பட அப்பகுதியிலுள்ள பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

இந்தக் கோர தாக்குதலில் 45 பேர் உயிரிழந்தனர் எனவும் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தின் இக் கொடூரத்தாக்குதலுக்கு உலக நாடுகளும் கண்டனம் வெளியிட்டுள்ளன. (நி-8)



## உக்ரைன்
## ட்ரம்ப் – ஜெல

(கீவ்)

உக்ரைனில் மூன்று வருடங்களாக நடைபெற்று வரும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி நேற்று முன்தினம் புதன்கிழமை மீண்டும் மோதிக்கொண்டனர்.

கிரிமியா மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை அங்கீகரிக்க மறுத்ததற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜெலன்ஸ்கியைக் கண்டித்துள்ளார்.

கடந்த வாரம் ட்ரம்ப் விடுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிலடிக்கு தயாராகும் இந்தியா

# அச்சத்தின் விளிம்பில் பாகிஸ்தான்!

(டில்லி)

**இந்தியா சர்ஜிக்கல் ஸ்டிரைக் நடவடிக்கையை எந்நேரத்திலும் மேற்கொள்ளக்கூடும் என்ற அச்சத்தில் பாகிஸ்தான் இருப்பதாக சர்வதேச உடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



இதன் காரணமாக பாகிஸ்தான் விமானப்படையைத் தயார் நிலையில் வைத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜம்மு - காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹால்காம் பகுதியில் பைசரன் எனும் புகழ் பெற்ற சுற்றுலாத் தளத்தில் அடையாளம் தெரியாத முகமூடி அணிந்த பயங்கரவாதிகள், அங்கு கூடியிருந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றிருந்தனர்.





இந்தத் தாக்குதலுக்கு எதிராக கடும் நடவடிக்கை என்ற ஒற்றைப் புள்ளியில் மத்திய அரசும், அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்துள்ளன.

இதனால், இந்தியாவின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என பாகிஸ்தானும் உற்றுநோக்க ஆரம்பித்துள்ளது.

நிச்சயம் பதிலடி உண்டு என்று உறுதியான குரல்கள் எழும்பத்தொடங்கி உள்ள நிலையில், பாகிஸ்தான் தனது தரப்பு நடவடிக்கையை மேற்கொள்ள ஆயத்தமாகி வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பாகிஸ்தானைத் தளமாக கொண்ட ஜஎஸ்ஜ இயக்கத்தின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் ப்ரண்ட் பொறுப்பேற்றுள்ளது.

அதன் விளைவாக இந்தியாவின் தரப்பில் இருந்து எப்படியும் சர்ஜிக்கல் ஸ்டிரைக் தாக்குதல் (இது ஒரு இராணுவத் தாக்குதல், இலக்கை மட்டுமே குறிவைத்து தாக்கும் நடவடிக்கை) நடத்தலாம் என்பதால் அதை எதிர்கொள்ள பாகிஸ்தான் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக, தமது விமானப்படை விமானங்களை பாகிஸ்தான் தயார் நிலையில் வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ...ன் போர் விவகாரம்

# ...லன்ஸ்கி மீண்டும் மோதல்

எச்சரிக்கையை எதிரொலிக்கும் விதமாக, ரஷ்யாவும் உக்ரைனும் அமெரிக்க அமைதித் திட்டத்திற்கு உடன்பட வேண்டிய நேரம் இது என்று ட்ரம்பின் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் தெரிவித்தார்.

“அல்லது அமெரிக்கா இந்த செயல்முறையிலிருந்து விலகிச் செல்ல வேண்டும்” என்றும் அவர் எச்சரித்தார்.

இந்தியாவில் செய்தியாளர்களிடம் பேசிய வான்ஸ், “இன்றைய நிலைக்கு அருகில் ஏதோ ஒரு மட்டத்தில் பிராந்திய எல்லைகளை முடக்குவதற்கும்” “நீண்ட கால அமைதிக்கு வழிவகுக்கும் என்று நம்பப்படும் நீண்டகால இராஜதந்திர தீர்வுக்கும்” இந்தத் திட்டம் அழைப்பு விடுத்துள்ளதாகக் கூறினார்.

அமெரிக்க முன்மொழிவை நன்கு அறிந்த ஒரு முன்னாள் மேற்கத்தேய அதிகாரி, கிரிமியாவை ரஷ்யா இணைத்ததை அங்கீகரிக்கவும் அழைப்பு விடுத்ததாகக் கூறினார்.

ஜனவரியில் பதவியேற்றதிலிருந்து, உக்ரைன் போருக்கான அமெரிக்கக் கொள்கையை ட்ரம்ப் மாற்றியுள்ளார், 2022 இல் தனது அண்டை நாட்டின் மீது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கிய ரஷ்யா மீதான அழுத்தத்தைத் தளர்த்தும் அதே வேளையில், உக்ரைனைப் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுத்தார்.

2014 ஆம் ஆண்டு சர்வதேச அளவில் கண்டனம் செய்யப்பட்ட ஒரு நடவடிக்கையாக, தீபகற்பத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றிய ரஷ்யாவிடம் உக்ரைன் கிரிமியாவை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்று ஜெலன்ஸ்கி கடந்த செவ்வாயன்று மீண்டும் வலியுறுத்தினார்.



“இங்கே பேசுவதற்கு எதுவும் இல்லை. இது நமது அரசியலமைப்பிற்கு எதிரானது,” என்று அவர் கூறினார்.

அமெரிக்கா, உக்ரைன் மற்றும் ஐரோப்பிய அதிகாரிகளுக்கு இடையேயான ...ன் பேச்சுவார்த்தைகள் மிகுந்த உணர்ச்சிகளா... குறிக்கப்பட்டதாக ஜெலன்ஸ்கி பின்னர் ஒரு எக்ஸ் பதிவி... தெரிவிக்கார் (நி-...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் குடித்தொகை வேறுபாடுகளும், குடியடர்த்தியும், குடிப்பரம்பலும் 1871 - 2022



**02**

வாழ்நாள் பேராசிரியர்.பொன்.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.

வடமாகாணம் 8884 சதுர கிலோமீற்றர் பரப்புடையது. புவியியல் ரீதியில் இம் மாகாணம் இரண்டு தனித்துவமான பரப்புக்களைக் கொண்டுள்ளது. அவை:-

(i) யாழ்ப்பாணக் குடாநாடு
(ii) பெருநிலப்பரப்பு (ஆனையிறவுக்குத் தென்பகுதி).

குடாநாடு 1076 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புடையது. இது வடமாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 13% கொண்டிருக்கின்றது. பெரு நிலப்பரப்பு 7214 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டதுடன் அது மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 87% ஆகும். இம் மாகாணத்தில் கடந்த 150 ஆண்டுகாலக் குடித்தொகை மாற்றத்தில் மூன்று முக்கிய போக்குகளைக் கொண்ட காலங்களை அடையாளம் காணமுடியும்

(i) 1871 - 1946 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம்
(ii) 1946 - 1981 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம்
(iii) 1981 - 2022ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம்

**1871 - 1946 காலப்பகுதி**

இக் காலப்பகுதியில் சராசரிக் குடித்தொகை வளர்ச்சி 10% இற்குக் குறைவாகவே உள்ளது. மேலும் 1911 - 1921 இற்கு இடைப்பட்ட காலத்தில் 1.4% வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது. இக் காலத்தில் சர்வதேச ரீதியாகப் பரவிய இன்புளுவன்சா காய்ச்சலால் இறப்பு வீதம் உயர்வாக இருந்ததே இதற் குரிய முக்கிய காரணம். 1871 - 1946 இற்கு இடைப்பட்ட காலத்தில் வடமாகாணத்தின் குடித்தொகை 41.4% மாத்திரமே அதிகரித்தது.

உயர்வாகப் பிறப்பு வீதம் இருந்த பொழுதும் தொற்றுநோய்களால் பெருமளவு இறப்பு ஏற்பட்டது. பெருநிலப் பிரதேசத்தில் மலேரியாவின் தாக்கமும் அதிகமாக இருந்தது. மேலும் இக்காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் மலேசியா, சிங்கப்பூருக்குத் தொழில் நிமித்தம் இடம்பெயர்ந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் உயர்வான பிறப்பும், இறப்பும் காணப்பட்டதுடன், சராசரி வாழும்காலம் 50 வயதிற்குட்பட்டிருந்தது.

**1946 - 1981 காலப்பகுதி**

1946 - 1981 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இறப்பு வீதம் குறைந்து சென்றதுடன் பிறப்பு வீதம் உயர்வாக இருந்ததால் குடிசன அதிகரிப்பு உயர்வாக இருந்தது. இக் காலத்தில் குடிசன அதிகரிப்பு 83% ஆகும். சராசரி ஆண்டு வளர்ச்சி 2.0-2.5% இற்கும் இடைப்பட்டதாக உள்ளது. இக்காலத்தில் அரசால் முன்னெடுக்கப்பட்ட பொது விநியோக உணவுப் பங்கீடு உணவுப் பாதுகாப்பையும், மக்களின் உடல்நலத்தையும் மேம்படுத்தியது.

மேலும் சுகாதாரத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களால் தொற்று நோய்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் மலேரியா நோய் பெருமளவு கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

1946 - 1981 இற்கு இடைப்பட்ட காலத்தில் மாகாணத்தின் குடித்தொகை 631 896 பேராலும், 131.8 வீதத்தாலும் அதிகரித்துள்ளது. இக் காலத்தில் உயர்வான பிறப்பும், குறைந்துசெல்லும் இறப்பும், வாழும் கால வயது நீடிப்பும் காணப்பட்டன.

**1981 - 2022 காலப்பகுதி**

இக் காலப்பகுதியை மேலும் இரண்டு பிரிவுகளாக நோக்கலாம். அவை:

1. 1981 - 2012 இற்கு இடைப்பட்ட யுத்தகாலம்

2. 2012 இற்குப் பின்னரான யுத்தத்தின் பின்னைய காலப்பகுதி

1970 களில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம், சிறு குடும்பக் கருத்தியல் படிப்படியாக மக்களிடையே வளர்ந்து 1980களில் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுடன் குடும்ப விரிவாக்கத்தை நிறுத்திக்கொள்ளும் போக்கு ஏற்படலாயிற்று. மேலும் 1977 இல் திறந்த பொருளாதாரக் கொள்கையால் பாதிக்கப்பட்டவர்களில் சிலரும், இக்கொள்கை கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையான வடபகுதி இளைஞர்களும் ஐரோப்பாவிற்குச் செல்லலாயினர். மேலும் 1980 களின் ஆரம்பத்தில் வட மாகாணத்தில் யுத்த சூழ்நிலை அதிகரிக்கத் தொடங்கியதாலும், பின்னர் யுத்தத்தினாலும் உள்ளூர் இடப்பெயர்வுக்கு உட்பட்டவர்களில் ஒரு பிரிவினர் வெளிநாடுகளுக்கு இடம் பெயரலாயினர்.

மேலும் 1983இல் ஏற்பட்ட ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் வழங்கிய பிரயாண அனுமதித் தளர்வுகளால் பெரும் எண்ண்ணிக்கையான குடும்பங்களும் இளைஞர்களும் வெளிநாடுகளுக்கு இடம்பெயரலாயினர்.

மேலும் 1985இல் இருந்து வட மாகாண மக்கள் பெரும் எண்ணிக்கையில் படகுகள் மூலம் அடைக்கலம் தேடித் தமிழ் நாட்டிற்குச் சென்றனர். இன்றும் 100, 000 இற்கும் மேற்பட்ட வட பகுதித் தமிழர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு அகதி முகாம்களிலும் அகதி முகாம்களுக்கு வெளியிலும் வாழ்கின்றனர்.

அன்று இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குப் பல பிரயாண முகவர்கள் கொழும்பிலும் பிற பகுதிகளிலும் செயற்பட்டனர். 1977 இல் இருந்து இளைஞர்களை மையமாகக்கொண்ட சர்வதேச இடப்பெயர்வுச் செயற்பாடுகள் இடம்பெறலாயின. ஆரம்பத்தில் பொருளாதார, வேலைவாய்ப்புக் காரணிகள் முக்கியமாக இருந்த நிலைகளில் 1980களில் இருந்து உள்ளூர் யுத்தம், பாதுகாப்பு, இடப்பெயர்வுப் பாதிப்புக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்த உற்றார், உறவினர், நண்பர்களின் ஆதவும் வழிகாட்டலும் சர்வதேசஇடப்பெயர்வை வேகப்படுத்தின. 1977இன் பின்னர் ஆரம்பமான வடமாகாண மக்களின் சர்வதேச இடப்பெயர்வு பல்வேறு வடிவங்களில் இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

வடபகுதித் தமிழ் இளைஞர்களின் சர்வதேச இடப்பெயர்வைத் தொடர்ந்து இவர்களுக்கு மணப் பெண்களை அனுப்பும் செயற்பாட்டில் பெரும் எண்ணிக்கையான இளம் தமிழ்ப் பெண்கள் சர்வதேச இடப் பெயர்வுக்கு உட்பட்டனர். தொடர்ந்தும் உட்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

மேலும் குடும்பங்கள் மீள் இணைப்பிலும், இளம் குடும்பங்களுக்கு உதவிக்காகப் பெற்றோர்களும் இடம்பெயர்ந்துள்ளார்கள். சர்வதேச இடப்பெயர்வுகளாலும், உள்ளூர் இடப்பெயர்வுகளாலும், யுத்த இடப்பெயர்வுகளாலும், அகதி வாழ்க்கைகளாலும் மற்றும் பல சாதகமற்ற காரணங்களாலும், மாகாணத்தின் பிறப்பு வீதம் குறைவடையலாயிற்று.

மேலும் யுத்தத்தில் போராளிகளினதும் மற்றும் பொது மக்களினதும் மரணங்களாலும், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் மருத்துவ வசதிகள் குறைவாலும் மாகாணத்தின் மரண வீதம் உயர்வாக இருந்தது. யுத்தத்தினால் மரணித்த போரா ளிகள், பொது மக்களின் எண்ணிக்கை பற்றி பல்வேறுபட்ட புள்ளி விபரங்கள் முன் வைக்கப்படுகின்றன.

1981 - 2012 இற்கு இடைப்பட்ட காலத்தில் இம் மாகாணத்தின் குடித் தொகை 52 266 பேரால், 4.7 வீதத்தால் குறைந்துள்ளது. இலங்கையின் குடித்தொகை இக் காலப்பகுதியில் 36.5 வீதத்தால் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு வீதம் வடமாகாணத்தின் குடித்தொகை வளர்ச்சியில் இருந்திருந்தால் இம் மாகாணக் குடித்தொகை 151 7154 பேராக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் 2012 இல் வடமாகாணத்தின் குடித்தொகை 1059 202 பேராக இருந்துள்ளது. இப்புள்ளிவிபரப்படி வடமாகாணம் யுத்தத்தாலும், இடப்பெயர்வுகளாலும் 45 7952 பேரை இழந்துள்ளது. 2010 இல் யுத்தம் முடிந்து, 2011 இல் மீள்குடியேற்றம் வன்னியில் இடம்பெறத் தொடங்கிய பின் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சிறிய எண்ணிக்கையினரே வட மாகாணத்திற்குள் மீளக் குடியேறியுள்ளனர். வடபகுதி முஸ்லீம்கள் வடமாகாணத்திற்கு வெளியில் இடம்பெயர்ந்து சென்ற பொழுதும், அவர்களின் விபரங்கள் வடமாகாணப் புள்ளி விபரத்தோடு சேர்க்கப்பட்டு இருந்தன.

குறிப்பாக இடம்பெயரந்த மன்னார் மாவட்ட முஸ்லீம்களின் வாக்காளர் பதிவு மற்றும் விபரங்கள் மன்னார் மாவட்டத்தாலேயே கையாளப்பட்டன.

இடம்பெயர்ந்த முஸ்லீம்களின் மீள்குடியேற்றம் இன்னும் முழுமையடையவில்லை. இன்றும் தமிழ் நாட்டில் நீண்டகாலம் வாழ்ந்து வருவதாலும் அவர்களுள் பெரும்பான்மையினர் அங்கேயே பிறந்து அங்கேயே கல்விகற்று, தமிழ்நாட்டு வாழ்க்கைக்கும் பழக்கப்பட்டவர்களாக இருப்பதாலும் இலங்கைக்கு வர அவர்கள் விருப்பப்படவில்லை.

இலங்கைக்குத் திரும்பி வந்தவர்கள் இங்கு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டதால் மீளவும் தமிழ் நாட்டிற்குத் திரும்பியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் புதுவாழ்வு தேடித் தொடர்ந்து வடபகுதித் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாலும், பிறப்பு வீதம் மேலும் மேலும் குறைந்து செல்வதாலும் குடித்தொகை வளர்ச்சி மிகவும் குறைவாகவே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வடமாகாணத்தின் குடித்தொகை வளர்ச்சியில் குடாநாடும் பெருநிலமும் வேறுபாடான வளர்ச்சிப் போக்கைக் காட்டுகின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உற்பத்திகளை பெறுமதி சேர் பொருட்களாக ஏற்றுமதி செய்ய வேண்டும்-ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

**விவசாய உற்பத்திப் பொருட்களை பெறுமதிசேர் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்ய வேண்டும். அதை நோக்கியே அனைத்து விவசாயக் கம்பனிகளும் இயங்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

விவசாயக் கம்பனிகள் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்த்துக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் (ஏ.எஸ்.எம்.பி.) வடக்கில் உருவாக்கப்பட்டுள்ள 17 விவசாய கம்பனிகளும் நேரடியாக ஏற்றுமதி செய்யும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய ஆளுநர் இத்தகைய விவசாயக் கம்பனிகளை வேறு தரப்புக்களாக கருதாது அவர்களுக்குரிய வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்புக்களை விவசாயத் திணைக்களம் வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

விவசாயிகளிடமிருந்து குறைவான விலைக்கு விவசாய உற்பத்திப் பொருட்களைப் பெற்று அதை கூடுதல் விலைக்கு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் செயற்பாடு தொடர்கின்றமையை இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகளே நேரடியாக நிறுவனங்களுக்கு விற்பனை செய்து இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் இந்த விவசாயக் கம்பனி நடைமுறை இன்னமும் ஊக்குவிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

அதேநேரம், வடக்கு மாகாணத்தில் எந்த இடத்தில் எந்தக் காலத்தில் எந்த விவசாய உற்பத்திப் பொருள் உற்பத்தியாகும் என்ற விபரங்கள் திணைக்களங்களிடம் இல்லாமல் இருப்பது துரதிஷ்டவசமானது. எதிர்காலத்தில் அந்த விபரங்கள் சேகரிக்க வேண்டுமென அறிவுறுத்தினார். குறித்த விபரங்கள் இருந்தால் அந்தக் காலப் பகுதிகளில் குறிப்பிட்ட விவசாய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த அல்லது அதன் மீதான வரியை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோர முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் அதிகாரிகள் எதிர்காலத்திலாவது அந்த விபரங்களை சேகரிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், வடக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் கீழ் இயங்கும் ஆராய்ச்சிப் பிரிவு ஒவ்வொரு விவசாயக் கம்பனிகளின் செயற்பாடுகளையும் இரு மாதங்களுக்குள் ஆராய்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆளுநருக்கு அறிக்கை சமர்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர், பிரதி விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் பங்கேற்றனர். (6-8)

# உணவகங்களில் அதிகாரிகள் திடீர் சோதனை நடவடிக்கை

## ஒவ்வாத உணவுகள் அழிப்பு

(நெளுக்குளம்)

மாங்குளம் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள ஏ-9 வீதி, மாங்குளம் மற்றும் திருமுறிகண்டியில் உள்ள உணவகங்களில் திடீர் பரிசோதனை ஒன்று நேற்று இடம்பெற்றிருந்தது.

ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரிகளின் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் இணைந்து குறித்த பரிசோதனை நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகங்கள் மூடப்பட்டதுடன் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு செய்யப்பட்டிருந்தது.

அத்தோடு சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய சில உணவகங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டதுடன், மூடப்பட்ட உணவகங்களின் குறைபாடுகள் நிவர்த்தி செய்ய 10 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமல் போனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் எச்சரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# சந்தைகளில் நேற்றைய விலை




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 300 | 200 | 400 |
| உருளைக்கிழங்கு | 170 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 | 200 | 250 |
| தக்காளி | 600 | 700 | 700 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 250 | 200 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 300 | 400 |
| கரட் | 800 | 550 | 650 | 550 | 600 |
| பூசணி | 200 | 240 | 150 | 200 | 250 |
| புடோல் | 200 | 250 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 70 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 140 | 150 | 150 |
| பாகற்காய் | 600 | 400 | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 250 | 150 | 200 | 200 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 200 | 400 |
| பீற்றூட் | 550 | 450 | 400 | 450 | 600 |
| கறிமிளகாய் | 600 | 300 | 450 | 500 | 600 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 2000 | 1500-2000 | 2000 |
| போஞ்சி | 500 | 550 | 650 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 250 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 60 | 80 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 200 | 150-200 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 700 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 300 | 600 | -- | -- | -- |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 150 | 100 | 60 |
| [illegible] | 80 | 70 | 80 | 80 | 80 |
| [illegible] | 150 | -- | 100 | -- | -- |

# வீட்டுத்திட்டம் பூர்த்தியாக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது

## அமைச்சர் அநுர கருணாதிலக

(தருமபுரம்)



கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைப் பூர்த்தியாக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணா திலக கிளிநொச்சியில் தெரிவித்தார்.

வடமாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதியமைச்சர் டி பி. சரத் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ். முரளீதரனை மாவட்ட செயலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடி இருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மீள் குடியேற்றத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் முன்னேற்றம், அறிவியல்நகர் நகர அபிவிருத்தி, மாவட்டத்தின் குடிநீர் விநியோகம் உள்ளிட்ட விடயங்களை மாவட்ட அரசாங்கதிபரிடம் கேட்டறிந்து கொண்டார். அதன் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (6-8-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 756





அக்காலத்தில் வட காவேரியாகிய கொள்ளிடமும் தென் காவேரியைப் போலவே புண்ணிய நதியாகக் கருதப்பட்டு வந்தது. துலாமாதத்தில் தினந்தோறும் கானாட்டுமுள்ளூர் ஆலயத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் இடபாரூடராகக் கொள்ளிடக் கரைக்கு எழுந்தருளி ஸ்நானத்துக்கு வந்துள்ள பக்தர்களுக்குச் சேவை தருவது வழக்கம். மத்தியான வேளையில் ஒவ்வொரு நாளும் உற்சவமாகவே இருக்கும். அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து பக்தர்கள் திரண்டு வருவார்கள். விஷ்ணு கோயில் அந்த ஊரில் சிறிதாக இருப்பினும் அந்தக் கோயிலிலிருந்தும் பகவான் கருட வாகனத்தில் ஆரோகணித்துக் கொள்ளிடக் கரைக்கு எழுந்தருளுவார்.

இவ்விதம் துலா மாதத்தில் வட காவேரியில் ஸ்நானம் செய்வதற்காக வந்து கூடியிருந்த ஜனக்கூட்டத்தினிடையே ஆழ்வார்க்கடியான் ஒரு நாவல் கிளையை மண்ணில் நட்டு வைத்து கொண்டு, "நாவலோ நாவல்! நாவலோ நாவல்! இந்த நாவலந் தீவில் வைஷ்ணவ சமயமே மேலான சமயம் என்று நிலைநாட்டுவதற்கு வாதப்போர் புரிய வந்துள்ளேன்.

சைவர்கள், சாக்தர்கள், அத்வைதிகள், காபாலிகர்கள், காலாமுகர்கள், புத்தர்கள், சமணர்கள் யார் வேணுமானாலும் வாதப் போர் புரிய வரலாம். அவர்கள் வெற்றி பெற்றால் அவர்களை என் தோள் மீது தூக்கி வைத்துக் கொண்டு ஊரைச் சுற்றி வலம் வருவேன், அவர்கள் தோற்றால் இடுப்புத்துணியைத் தவிர மற்றதையெல்லாம் இங்கே கொடுத்து விட்டுப் போக வேணும்! நாவலோ நாவல்" என்று கத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் ருத்திராட்ச மாலைகள், மகர கண்டிகள், கமண்டலங்கள், குண்டலங்கள், பட்டுப் பீதாம்பரங்கள், பொற்காசுகள் ஆகியவை குவிந்து கிடந்தன. இவற்றிலிருந்து வெகு நேரம் வாதமிட்டுப் பலரை வாதப் போரில் வென்றிருக்க வேண்டும் என்பது தெளிவாயிருந்தது. அவனுக்குப் பக்கத்தில் கடம்பமரம் ஒன்றில் சாய்ந்து கொண்டு வந்தியத்தேவன் கையில் உருவிய கத்தியுடன் நின்று கொண்டிருந்தான்.

இப்போது அவனுடைய அரையில் உடுத்திய ஒரு துணியும், கையில் ஒரு கத்தியும் மட்டும் தான் இருந்தன. அவனுடைய தோற்றத்திலிருந்து ஆழ்வார்கடியான் மீது பலாத்காரத்தைப் பிரயோகிக்கப் பார்த்தவர்களை அவன் கத்தியை வீசிப் பயமுறுத்தி அனுப்பியிருக்க வேண்டும் என்று தோன்றியது. அந்தச் சமயத்தில் கூட்டமாகவும், கோஷித்துக் கொண்டும் வந்த சைவர் கூட்டம் ஒன்றைப் பார்த்து அவன் கூறிய மொழிகளிலிருந்தும் அது வெளியாயிற்று.

"எச்சரிக்கை! நியாயமாக வாதப் போர் செய்வோர் செய்யலாம். அத்துமீறி இந்த வைஷ்ணவன் மீது யாராவது கையை வைத்தால் இந்த வாளுக்கு இரையாவார்கள்!" என்று கூறியதுடன், கத்தியையும் இரு முறை சுழற்றினான். கோபத்துடன் வந்த சைவர்கள் சாந்தமடைந்தார்கள். அவர்களில் ஒருவர், "ஓ வைஷ்ணவனே! ஏதோ நீ இன்றைக்கு வாதத்தில் ஜெயித்து விட்டதாக எண்ணிக் கர்வம் கொள்ளாதே! திருநாரையூருக்குப் போ! அங்கே உன்னை வாதில் வென்று புறமுதுகிட்டு ஓடச் செய்யக்கூடிய நம்பியாண்டார் நம்பி இருக்கிறார்!" என்றார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நடப்பது எல்லாம் நன்மைக்கே



(நேற்றைய தொடர்ச்சி)

என ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது குள்ளநரி.

வெகுநாட்களாகியும் குணமாகாமல் காலை நொண்டிக் கொண்டே ஒரு நாள் காட்டில், வெகுதூரம் வேட்டைக்கு வந்துவிட்ட சிங்கம், ஒரு இடத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்த ஒரு கூண்டுக்குள், ஆட்டுக்குட்டி ஒன்று இருந்ததைக் கண்டது. ஆவலுடன் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து, கடித்துக் குதறித் தின்றது. தின்று முடிந்து, ஏப்பம் விட்டபடி திரும்பிய சிங்கம் அந்த இரும்புக் கூண்டில் கம்பிக்கதவால் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, தி[illegible]தது. மடத்தனமாக கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்து வேதனைப் பட்டது. ஆத்திரத்தில் கர்ஜனை செய்தது. அப்போது கூண்டில் அடைப்பட்ட சிங்கத்தை, தங்கள் வண்டியில் கட்டி இழுத்துச் சென்ற காவலர்கள், நம் இளவரசர் கேட்டபடி அவர் விளையாடுவதற்கு ஒரு சிங்கம் கிடைத்துவிட்டது. இதைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார். இளவரசரின் மகிழ்ச்சியைக் கண்டு மன்னர் நமக்குப் பரிசுகள் கொடுப்பார். என்றெல்லாம் பேசிக் கொண்டே அரண்மனையை அடைந்தனர். கூண்டிலிருந்த சிங்கத்தை இறக்கிய போதுதான் அது நொண்டி நொண்டி நடந்ததை அறிந்தனர். இதைக்கண்டு வருந்திய அவர்கள், "இது ஊனமுற்ற சிங்கம். இதை நம் இளவரசர் விளையாடப் பழக்கப் படுத்த முடியாது. எனவே, இதைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிடுவதே நல்லது என்று கூறியபடி சிங்கத்தை மீண்டும் காட்டுக்குள் கொண்டு சென்று விட்டுவிட்டுத் திரும்பினர் காவலர்கள். சிங்கத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது.

"நமது கால் விரல், இல்லாததால் தான் நம்மை விட்டு விட்டார்கள். "நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்று அன்றைக்கு நரி சொன்னபோது, ஆத்திரப்பட்டு அதைக் கூண்டில் அடைத்தோம். ஆனால் அது சொன்னது சரியென்று இப்போதுதான் உணர முடிகிறது" என்றெல்லாம் நினைத்தபடி தனது குகைக்குச் சென்ற சிங்கம், தனது மனைவியிடமும் குட்டிகளிடமும் நடந்ததைச் சொன்னது.

உடனடியாக, சிப்பாய்க் குரங்குகளை அழைத்து, "சிறையைத் திறந்து குள்ளநரியை வெளியில் அனுப்புங்கள்" என்று உத்தரவிட்டது. அதன்படி சிறையை விட்டு, வெளிவந்த குள்ளநரியை வரவேற்ற சிங்க ராஜா, "அறிவுக் கடலே, இன்று முதல் நீங்கள்தான் எனது மந்திரி, நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்று நீங்கள் சொன்னது உண்மையாகி விட்டது. யர்ர் எதைச் சொன்னாலும் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன் என்று மகிழ்ந்தது.

நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று நினைத்தால் துன்பம் தரக்கூடிய செயல் எதுவும் இல்லை.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைதியாக வாழ்க்கையை உற்று நோக்கும் போது மற்றவரின் தேவைகளை எளிதாக உணர முடிகிறது ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இடர்படும் கப்பல் சேவை வல்லவன் பம்பரம் மணலிலும்...

யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமான விமானம் மற்றும் கப்பல் சேவைகளை நடத்துவதில் எத்துணை கடினமும் சிக்கலும் உண்டென்பதை இப்போது நாம் உணர முடிகிறது.

இங்கு விமான சேவையை நடத்துவதற்கு ஆகாயமோ, அன்றி கப்பல் சேவையை நடத்துவதற்கு கடலோ தடையன்று.

மாறாக, யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமான விமான மற்றும் கப்பல் சேவைகளை நடத்துவதன் மூலம் தமது வர்த்தகம் பாதிக்கப்படும் என்ற காரணத்தால், பெரும் வர்த்தகர்கள் அதற்குத் தடையாக இருக்கின்றனர்.

இதன் காரணமாக அடிப்படை வசதிகள் குறைந்த விமான சேவை பலாலிக்கும் சென்னைக்கும் நடந்தாகிறது.

அதிலும் பலாலி விமான நிலையத்தினூடாகச் சென்னைக்குச் செல்லும் பயணிகள் எடுத்துவரக்கூடிய பொருட்களின் நிறை மிகக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதாவது, பயணி ஒருவர் வெறும் 15 கிலோ கிராம் எடையுடைய பொருட்களை மட்டுமே பலாலி விமான சேவை ஊடாகக் கொண்டுவர முடியும்.

அதாவது ஒருவர் தன்னுடன் எடுத்துச் செல்கின்ற பயணப் பொதியுடன் திரும்பி வரக்கூடியதாக நிறை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

தவிர, யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கும் தமிழகத்து நாகப்பட்டினத்துக்குமான கப்பல் சேவை பற்றிச் சொல்லவும் வேண்டியதில்லை.

குறித்த கப்பல் சேவை நடைபெறுகிறதா? இல்லையா? என்பது கூடத் தெரியாத நிலையே காணப்படுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையிலான கப்பல் சேவை ஆரம்பமாகிறது எனக் கூறி வருடங்களாகின்றன.

ஆம், அந்தக் காலத்து மேடை நாடகங்கள் போல, இதோ! நாடகம் ஆரம்பமாகிறது என இரவு 9 மணிக்கு அறிவிக்கத் தொடங்கி; அதிகாலை 3 மணிக்கு நாடகம் ஆரம்பமாவது போலவே தலைமன்னார் – இராமேஸ்வரக் கப்பல் சேவையும் உள்ளது.

என்னசெய்வது, பலாலி சர்வதேச விமான நிலையம் என்பது வெறும் பெயரளவில் மட்டுமே.

உண்மையில் பலாலி – சென்னை விமான சேவையும் காங்கேசன்துறை – நாகப்பட்டினம் கப்பல் சேவையும் இந்திய மத்திய அரசின் கட்டாயத்தில் இடம்பெறுகிறதேயன்றி, மற்றும்படி குறித்த விமானம் மற்றும் கப்பல் சேவையால் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற எண்ணம் கிஞ்சித்தும் இல்லை என்பது தான் உண்மை.

ஆம், வல்லவன் பம்பரம் மணலிலும் சுற்றும் என்ற பழமொழியின் பொருளை; மேற்படி பலாலி விமான சேவையும் காங்கேசன்துறை கப்பல் சேவையும் படுகின்ற பாட்டிலிருந்து நாம் உணர முடியும்.

# யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவக் கற்கையை ஆங்கிலமொழிக்கு மாற்றுவது ஆபத்தானது

## தமிழ்மொழி மூலக் கற்பித்தலை மாற்றக்கூடாது கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையை ஆங்கில மொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் திட்டமிடுவதாக அறிகிறோம் இது ஆபத்தானது. எமது சுதேசிய மருத்துவப் பாரம்பரியம் பேணிப் பாதுகாப்பதற்காக சித்த மருத்துவ பீட கற்கை நெறி தமிழ்மொழியில் தொடர வேண்டும். இதனைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு யாழ்.பல்கலைக் கழக சமூகம் உறுதிப்படுத்த வேண்டும்என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் பல சான்றோர், பெருமக்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது.

எமது பிரதேசப் பல்கலைக்கழகம் எமது பிரதேச சுதேசியப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் பெரும் கடமையாகும். எமது சுதேசிய மருத்துவப் பாரம்பரியம் பேணிப் பாதுகாப்பதற்காக யாழ்.பல்கலைக்கழக கல்விச் சமூகம் 70 களின் பிற்பகுதியில் எடுத்த முயற்சியின் விளைவாக சித்த மருத்துவத்துறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின்அயராதமுயற்சியால் சித்த மருத்தவ நூல்கள், ஏடுகள் சேகரிக்கப்பட்டு பாரம்பரிய வைத்தியர்களிடம் ஆலோசனை பெற்று பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இத்துறை ஆரம்பிக்கப்பட்டது. இணுவில், வட்டுக்கோட்டை, சில்லாலை, ஏழாலை, பருத்தித்துறை, அளவெட்டி போன்ற ஊர்களில் இருந்து சித்த வைத்தியர்களின் நூல்கள், உதவிகள் பெறப்பட்டன. பல்கலைக்கழக நூலகர் முருகவேள், பதிவாளர் சிவராஜா போன்ற பெருமக்கள் சித்த மருத்துவத் துறைக்கான வளர்ச்சியில் அருந்துணை செய்துள்ளனர்.

சித்த மருத்துவ பீடம் முற்றுமுழுதாக சுதேசிய வைத்தியப் பாரம்பரியத்தை சிறப்பாக வளர்த்தெடுத்துள்ளார்கள். மேலும் கைதடியிலுள்ள சித்தவைத்திய போதனா வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றார்கள். பலநூறு சித்த மருத்துவர்களைத் தொடர்ந்து உருவாக்கியுள்ளார்கள். துறைசார் விரிவுரையாளர்கள் பட்டப்பின் படிப்புகளை மேற்கொண்டு இன்று நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக விளங்குகிறார்கள்.

சகல கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும் தமிழ்மொழி மூலம் சிறப்பாக நடைபெறுகின்றது. நீண்ட காலமாக எடுத்த முயற்சியின் பயனாக சித்த மருத்துவத்துறை தனிப்பீடமாக உயர்வு பெற்றுள்ளது. மேலும் சித்தமருத்துவபீடம் விஸ்தரிப்பதற்காக புதிய நிலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயர் கல்வி அமைச்சு யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை ஆங்கிலமொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம். இது ஆபத்தானது.

இது பாரம்பரிய சித்த மருத்துவத்துறையை அருகிப்போகச் செய்யும் முயற்சியாகும். அகத்தியர், பதினென் சித்தர்கள், திருமூலர், திருக்குறள், பரராஜசேகரம் போன்ற மூலநூல்களை மொழிபெயர்ப்பதென்பது முடியாத விடயம்.

இதை அனைவரும் அறிவர். இந்நிலையில் சித்த மருத்துவத்தை ஆங்கில மொழியில் எவ்வாறு கற்பிக்கப் போகிறார்கள்? இவ் விடயம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மூதவை, பேரவை மற்றும் துறை சார்ந்த அறிஞர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

எக்காரணம் கொண்டும் தமிழ் மொழி மூலக் கற்பித்தலை மாற்றம் செய்யக்கூடாது. இதனையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு யாழ்.பல்கலைக்கழக சமூகம் தெளிவுபடுத்த வேண்டும் என்றுள்ளது. (ம-4,7)

### யாழ்.மாவட்டத்தில்

## தேர்தல் விதிமீறல்கள் அரைச்சதம் கடந்தது

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 50 இற்கும் அதிகமான தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

### யாழ்.இளைஞர்களிடம் அத்துமீறிய

## மாங்குளம் பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவழிக்கை எடுக்கப்படும்

### வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதி

யாழில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற இளைஞர் குழுவினருடன் முரண்பட்டு, அவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட மாங்குளம் பொலிஸார் இருவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இளைஞர் குழுவொன்று கடந்த 22ஆம் திகதி யாழில் இருந்து வவுனியா நோக்கிக் காரில் பயணித்துள்ளனர். இந்நிலையில் அந்த இளைஞர்களை மாங்குளம் பொலிஸார் வழிமறித்துள்ளனர். வழிமறிக்கும் போது டோர்ச் லைட் வெளிச்சத்தை கண்ணில் பாய்ச்சியே வழிமறித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறு வழிமறிப்பது தவறு என அந்த இளைஞர் குழு எடுத்துக் கூறிய போது அவர்களுடன் பொலிஸார் முரண்பாட்டில் ஈடுபட்டதுடன் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை குறித்த இளைஞர் குழுவினர் ஊடகங்களினூடாக வெளிக்கொணர்ந்ததோடு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபாலவின் கவனத்துக்கும் கொண்டு சென்றிருந்தனர்.

இந்நிலையிலேயே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விசுவாவசு வருஷ' புத்தாண்டு பலன்கள்



**கிரகநிலை** - இராசியில் சனி - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), புதன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன் - சுகஸ்தானத்தில் குரு - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் - அஷ்டம ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன் என வலம் வருகிறார்கள்

**பலன்கள்:** எடுத்த காரியம் எவ்வளவு கடினமான காரியமாக இருந்தாலும் தனது புத்தி சாதுர்யத்தால் எளிதாக முடிக்கும் கும்ப ராசி நேயர்களே! இந்த வருடம் நிரந்தர வருவாய் வரும் தொழில் அமையும். வெளியூர் பயணங்களை அடிக்கடி செய்து செய்தொழிலில் வளர்ச்சி காண்பீர்கள். செய்கின்ற காரியங்களில் ஏற்படும் இடையூறுகளை சீரிய முயற்சிகளால் வெற்றியடையச் செய்வீர்கள்.

உறுதியுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். சமூகத்தில் மதிப்பு மரியாதைகள் உயரும். சார்ந்துள்ள துறையில் பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் அறிவுரையால் தொழிலில் புதிய நுட்பங்களைப் புகுத்துவீர்கள். நண்பர்களும் உங்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பர். உறவினர்கள் அனைவரும் வேலைப்பளு இருந்தாலும் நன்கு உழைப்பீர்கள். பணவரவு நன்றாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத உயர்வுகள் தேடி வரும்.

சக ஊழியர்கள் உங்கள் வேலையில் பங்கெடுத்துக் கொள்வார்கள். அவர்களிடம் அநாவசிய விரோதம் எதுவும் வேண்டாம். சிலருக்கு விருப்பமில்லாத இட மாற்றங்களும் கிடைக்கும். பொறுமையுடனும் கடமை உணர்ச்சியுடனும் பணியாற்றுவீர்கள்.

**வியாபாரிகள்:** கொடுக்கல் வாங்கல் விடயங்களைத்




டாகும்போது பொறுமையுடன் பேசித் தீர்த்துக் கொள்வீர்கள். பயணங்கள் செய்யும்போது கவனத்துடன் இருக்கவும்.

**மாணவர்களுக்கு-** கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். பெற்றோரின் ஆதரவைப் பெறுவீர்கள். நண்பர்களிடம் அநாவசியப் பேச்சு வேண்டாம். ஆசிரியர்களின் பாராட்டு மழையில் நனைவீர் கள்.

**அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு நன்மைகள் கிடைக்கக் கூடிய காலகட்டமாகும். எடுத்த காரியம் கைகூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும்.

**சதயம்:** இந்த ஆண்டு உங்கள் மீதான அவப்பெயர்

## கடினமான காரியமாக இருந்தாலும் எளிதாக முடிக்கும் கும்ப ராசி நேயர்களே!

**கிரகமாற்றங்கள்:** 26-04-2025 அன்று ராகு பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம். 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடை கிறார். 06.03.2026 அன்று சனி பகவான் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

11-05-2025 அன்று குரு பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-10-2025 அன்று குருபகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-11-2025 அன்றுகுரு பகவான் வக்கிரம் ஆரம்பம்.

21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி

உங்களைப் புரிந்து கொள்வர். குடும்பத்தில் உங்களின் செல்வாக்கும் உயரத் தொடங்கும். தாய்வழி உறவுகளில் சிறப்புகள் உண்டாகும். மேலும் சிலருக்குத் தாய் வழிச் சொத்துக்களும் கிடைக்கும்.

புதிய வண்டி வாகனங்கள் வாங்கும் யோகமும் உண்டு. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள்.

குழந்தை இல்லா தவர்களுக்குக் குழந்தை பாக்கியமும் உண்டாகும். எதையும் சமயமறிந்து பேசி வெற்றிபெறும் காலகட்டம் இது. வருமானம் சீராக இருந்தாலும் செலவுகள் சற்று அதிகரிக்கும். அதனால் சிக்கனத்தைக் கையாளவும்.

இதனால் புதிய ஊக்கத்துடனும் உத்வேகத்துடனும் வேலை செய்யும் பக்குவம் உண்டாகும். உங்கள் பேச்சில் சிறிது தற்பெருமை தலை தூக்கும். பயணங்கள் செய்யும்போது புதிய இடர்பாடுகளைச் சந்திக்க நேரிடும். வம்பு வழக்குகளில் விட்டுக் கொடுத்து சமாதானமாகவே போகப் பார்க்கவும்.

**உத்தியோகத்தர்கள்:**

திருப்திகரமாக முடிப்பார்கள். இடையூறுகள் தோன்றினாலும் அவற்றைச் சமாளித்து வெளி வந்து விடுவீர்கள். கால தாமதமானாலும் திட்டமிட்ட பணிகள் நிறைவடைந்துவிடும். வியாபாரிகள் மத்தியில் உங்கள் செல்வாக்கு உயரும். புதிய முதலீடுகளைச் யோசித்துச் செய்யவும்.

**அரசியல்வாதிகள்:** சங்கடங்கள் குறையும். எதிர்கட்சியினரும் ஆதரவு தருவார்கள். கட்சி மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள். இதனால் புதிய பொறுப்புகளும் வரும். தொண்டர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். திட்டமிட்ட வேலைகளில் அலைச்சல் டென்ஷன் ஏற்பட்டாலும் முடிவு சாதகமாகவே முடியும்.

**கலைத்துறையினர்:** புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். அதில் திறமைக்கை நன்றாக வெளிப்படுத்தி பாராட்டுகள் பெறுவீர்கள். ரசிகர்களின் ஆதரவுடன் இனிய பயணங்களை மேற்கொள்வீர்கள். ஒப்பந்தங்களில் நல்ல வருமானம் வரும்.

**பெண்கள்:** கணவருடனான ஒற்றுமை சீராகும். குழந்தைகளின் மூலம் மகிழ்ச்சி கிட்டும். பிரச்சினைகள் உண்

மறைந்து செல்வாக்கு மேம்படும். உங்கள் சொல்லுக்குப் பிறர் மரியாதை கொடுப்பர். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினை கட்டுக்குள் அடங்கி இருக்கும்.

**பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு தேவையான இடங்களில் நீங்கள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. தேவைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தியாகும். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கலாம்.

**பரிகாரம்:** சனிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று 11 முறை வலம் வரவும். தினசரி மாலை வேளையில் ஶ்ரீலலிதா ஸகஸ்ர நாமம் பாராயணம் செய்யவும்.

சனிதோறும் விநாயகருக்கு அறுகம்புல்லை அணிவித்து வழிபட்டு வர உங்கள் பொருளாதார நிலைமை படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும்.

கிழக்கு, வடக்கு ஆகிய திசைகள் அனுகூலமாக இருக்கும். சூரியன் - குரு- சுக்கிரன் நன்மை அளிப்பனவாக இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வரும்...

பாடசாலைகளும் வழமைபோன்று எதிர்வரும் 07ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளை எதிர்வரும் 04ஆம் திகதி கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள சில பாடசாலைகள் எதிர்வரும் 01 ஆம் திகதியிலிருந்து தேர்தல் நடவடிக்கைளுக்காகப் பயன்படுத்தப்படும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7,4)

## வட்டுக்கோட்டைப்...

கில் 10 வருடங்களின் பின்னர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு கொழும்பு செட்டியார் தெருவில் அமைந்துள்ள விடுதியில் பெண்ணொருவரை கொலை செய்து, அவரது உடலைப் பயணப் பைக்குள் அடைத்து, பின்னர் அதனை கொழும்பு பெஸ்டியன் வீதியில் உள்ள பேருந்து நிறுத்தமொன்றில் விட்டுச் சென்றிருந்த கொலைச் சம்பவம் தொடர்பான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

வழக்கின் சந்தேக நபர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

சுமார் 10 வருடங்களாக இடம்பெற்று வந்த குறித்த வழக்கின் இறுதித் தீர்ப்பினை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே நேற்று அறிவித்தார்.

சந்தேகநபரான பேட்ரிக் கிருஷ்ண ராஜாவிற்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கினைத் தாக்கல் செய்திருந்தது. நீண்ட விசாரணைக்குப் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே தீர்ப்பை அறிவித்து, குற்றச் சாட்டுக்களில் பிரதிவாதி குற்றவாளி எனக் கண்டறிந்தார்.

இந்தச் சம்பவம் 2015ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்ததுடன் பெண்ணின் சடலம் 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி கண்டெடுக்கப் பட்டது.

யாழ்.வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 34 வயதுடைய கார்த்திகா என்ற பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தார். சடலமாக மீட்கப்பட்ட பெண் கடந்த 3 வருடங்களாக கொழும்பிலேயே வசித்து வந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

செட்டியார் தெருவில் உள்ள தங்கு மிடத்தில் வைத்தே கார்த்திகா கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் 3 அடி நீளம், 2 அடி அகலம் மற்றும் 3 அடி உயரமான கறுப்பு நிறப் பெட்டியொன்றை சிரமத்துக்கு மத்தியில் சந்தேக நபர் சுமந்துகொண்டு விடுதியில் இருந்து வெளியேறும் CCTV காட்சிகளும் வெளியிடப்பட்டிருந்தன.

சந்தேக நபர் பயணப் பெட்டியுடன் பஸ்டியன் மாவத்தை பஸ் நிலையத்துக்குச் சென்றமைக்கான ஆதாரங்களாக CCTV காட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. குறித்த வழக்கின் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் சந்தேகநபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. (ம-7,4)

## இலங்கை...

நில் ஒரு பங்கினர் மீண்டும் வறுமைக்குள் சிக்கிக்கொள்ளும் அபாயம் உருவாகியுள்ளதாக உலக வங்கி எச்சரித்துள்ளது.

2025ஆம் ஆண்டிற்குரிய இலங்கைக்கான அபிவிருத்தி அறிக்கையை வெளியிடும்போதே உலக வங்கி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மாறுபாடுகளைக் காட்டி வருகிறது என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நாட்டில் வறுமையின் அபாயம் மீண்டும் அதிகரித்து வருவதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொருளாதாரம் ஒரு நிலையான தன்மையைப் பெற்றிருந்தாலும், நாட்டில் வறுமை அல்லது வறுமை கோட்டிற்குள்ளாகும் நிலை அதிகரித்துள்ளதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7,4)

## நவம்பர்...

திகதி நடைபெறவிருந்த 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 5ஆம் திகதிவரை இடம் பெறும். (ம-7,4)

## உயர்தரப்...

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று அல்லது நாளை வெளிவரும் எனப் பரீட்சைத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## 3ஆம் தவணை...

வருகிறது.

இது குறித்து கல்வியமைச்சு வெளியிட்டுள்ள விசேட சுற்றுநிருபத்திற்கமைய மூன்றாம் தவணையின் முதலாம் கட்டமானது எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நவம்பர் மாதம் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது

தொடர்ந்து நவம்பர் மாதம் 08ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 07ஆம் திகதி வரையில் உயர்தரப் பரீட்சைக்கான விடுமுறை வழங்கப்பட்டு மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் டிசம்பர் மாதம் 08ம் திகதி திங்கட்கிழமை முதல் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும் என்றுள்ளது. (ம-7,4)

## இர...

உயிரிழந்தவராவார்.

கடந்த 21 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து நேற்று முன்தினம் (23) அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று (24) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் திடீர்

# காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் பலி

குருநாகல் - எஹட்டுவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கத்துருவெவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் எஹட்டுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய குடும்பஸ்தர் ஆவார்.

இவர் நேற்றைய தினம் அதி காலை தனது வீட்டுத் தோட்டத்திற்குள் நுழைந்த காட்டு யானையை விரட்ட முயன்ற போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,4)

மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4)


மஹஜன சம்பத — திகதி 2025.04.24 — சீட்டிழுப்பு இலக்கம் 5811 — P 2 9 5 3 9 7 — அத சம்பத P 5 3 9 7 — சீட்டிழுப்பு இலக்கம் 386 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.04.24 — சீட்டிழுப்பு இலக்கம் - 1841 — D 21 22 63 77 D — Double Chance 01863

மெகா பவர் — திகதி 24/04/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2159 — I 21 10 15 49 77

ජය JAYA — திகதி 2025.04.24 — சீட்டிழுப்பு இலக்கம் 079 — U 2 4 1 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4053 — சீட்டிழுப்பு திகதி 24.04.2025 — Y 05 10 17 22 — Y — தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.04.24 — சீட்டிழுப்பு இலக்கம் 1120 — விருச்சிகம் 20 37 46 62 விருச்சிகம் — 95125 — 39

உத்தியோகபூர்வ முடிவுகள் — 24.04.2025 — வெற்றி வாரம் 519 — S 3 6 5 2 4 5 — 80860 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,988.862.00 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2785 — சீட்டிழுப்பு திகதி 2025.04.24 — தினம் வியாழக்கிழமை — 13 20 51 78 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,913,116.00 — DLB

சனிதா — திகதி 24.04.2025 — வெற்றி வாரம் 4946 — 21 22 32 58 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,393,094.00 — ரூ.100,000/- 60647 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி — 668 — 24.04.2025 — வியாழக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 06 17 24 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4497 — சீட்டிழுப்பு திகதி 24.04.2025 — தினம் வியாழக்கிழமை — 38 48 50 59 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,399,156.80 — 156698 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — D 17 17 36 38 51 — 1961 — 24.04.2025 வியாழக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.572,873,253.20 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம்: 2611 — சீட்டிழுப்பு திகதி: 2025.04.24 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,913,686.40 — 42 46 55 76 I — 204773 — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இந்தியா...

பாகிஸ்தான் இடையிலான இராஜ தந்திர உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

தாக்குதலையடுத்து இரண்டு நாடுகளும் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்துள்ளன. உடன் அமுலுக்கு வரும்வகையில் பாகிஸ்தான் பிரஜைகளுக்கான விசா விநியோகத்தை இந்தியா நிறுத்தியுள்ளது.

இந்தியாவிலுள்ள அனைத்து பாகிஸ்தான் பிரஜைகளும் எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மருத்துவ காரணங்களுக்காக விசா பெற்றுக்கொண்டவர்கள் இந்தியாவை விட்டு வெளியேற 72 மணித்தியாலங்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாகிஸ்தானிலிருந்து இயன்றளவு விரைவாக வெளியேறுமாறு தமது நாட்டுப் பிரஜைகளை இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

காஷ்மீர் பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாதிகள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து தண்டனை அளிப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி சூளுரைத்துள்ளார்.

மேலும், இந்த பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாதிகள் மற்றும் அவர்களுக்கு உதவி புரிந்தோர் கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு தண்டிக்கப்படுவார்கள்.

பயங்கரவாதிகளின் மீதமுள்ள மண்ணைப் பறிக்கும் நேரம் வந்துவிட்டதாகவும் கார்கில் முதல் கன்னியாகுமரி வரை முழுநாடும் இந்த பயங்கரவாதத் தாக்குதலால் வருத்தமாகவும் கவலையாகவும் உள்ளதெனவும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பாகிஸ்தான் அரசின் உத்தியோக பூர்வ எக்ஸ்தளம் இந்தியாவிற்குள் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சினால் எக்ஸ் நிறுவனத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலான சிந்து நதி நீர் ஒப்பந்தமும் இந்தியாவினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பஹல்காம் தாக்குதல் என்பது இந்தியாவின் பழி சுமத்தும் செயற்பாடாக இருக்கலாமென பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இதனிடையே இந்திய உரிமம் பெற்ற மற்றும் இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து விமானங்களும் தமது வான்பரப்பில் பயணிப்பதை தடுத்து உத்தரவிடுவதாக பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதி பைசரன் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் மீது கடந்த 22 ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 26 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## பாரபட்சம்...

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மன்னாரில் இருந்து புத்தளத்துக்குச் சொப்பின் பையுடன் வந்தவர்கள் இன்று பத்துக் கப்பல்களை வாங்கும் நிலையை அடைந்துள்ளனர். நாங்கள் யாருக்காகவும் பாரபட்சம் பார்க்க மாட்டோம்.

பொதுமக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்போம். நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே உண்மையான அரசியல். உங்களுக் குத்தெரியும் இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் பெரிய மனிதர்களுக்கு இருக்கவில்லை.அது சாதாரண மக்களுக்காகவே இருந்தது.

ஆனால், இன்று அதனை உங்களின் வாக்குகளின் மூலம் மாற்றியுள்ளோம். இன்று மிகப் பெரிய இலஞ்ச, ஊழலில் ஈடுபட்ட முதலைகளைப் பிடித்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் வேலை நடக்கின்றது. முன்னொருகாலத்தில் அமைச்சர்களைக் கண்டு பொலிஸார் ஓடி ஒளிந்தார்கள். இன்று பொலிஸாருக்குப் பயந்து அமைச்சர்கள் ஓடி ஒளியும் நிலையை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம் என்றார். (ம-4,7)

## தெற்கைப்போல்...

கண்டுபிடிக்கின்றனர். உப்பிலே நீங்கள் பார்ப்பது பெயரையா?, சுவையையா?.

இவ்வாறான சின்ன விடயங்களுக்காக இனவாதத்தைத் தூண்டும் ராஜபக்ஷக்கள் போன்ற சகோதரர்கள் வடக்கிலும் உள்ளனர்.

ஒற்றுமையை ஏற்படுத்தும்போது இனவாதிகள் குழப்பம் அடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் எமது வேட்பாளர்கள் தொடர்பாக தேவையில்லாத விடயங்களைச் சொல்லிவருகின்றனர்.

இப்படியான பொய்களை மக்கள் நம்ப வேண்டாம். கிராமத்திலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை அமைப்போம். எனவே மக்கள் அர்ப்பணிப்புள்ள உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். தமிழரசுக் கட்சிக்கு ஒரு தொன் காசு வழங்கினாலும் வேலை செய்யமாட்டார்கள்.

வடக்கு மாகாண சபையில் நடந்தது உங்களுக்குத் தெரியும். மகிந்த தெற்கிலே களவெடுத்தார். தேர்தலில் கூறுவார் சிங்கள ஜாதி சிங்கள ஜாதி என்று. சிங்கள மக்கள் வாக்களித்தார்கள். அவர் திறைசேரியை பூஜ்ஜியமாக்கினார்.

வடக்கிலும் அப்பிடிச் சிலர் உள்ளனர். அவர்கள் அரசியல் சோம்பேறிகள். சும்மா இருப்பார்கள்.தேர்தல் காலங்களில் தமிழர் உரிமை, தமிழர் உரிமை என்பார்கள். தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். பின்னர் அவர்கள் லண்டனுக்குப் போய்விடுவார்கள்.

இதுதானே இதுவரை காலமும் நடந்தது. சில தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் இங்கு தேர்தலில் போட்டியிடும் நிலையில் அவர்கள் அரசியல் சுற்றுலாப் பயணிகளாகவே உள்ளனர்.

நான் நினைக்கின்றேன். சுமந்திரனை விட நான் அதிகமாக யாழ்ப்பாணம் போயிருப்பேன் என்று. எனவே, தேசிய மக்கள் சக்தி உங்களுடைய கட்சி என்றார். (ம-4,7)


**Smart Science Academy**

- Lt.T. நாகரட்ணம் ஆசிரியர் ஞாபகார்த்த இரசாயனவியல் மாதாந்த தொடர் பரீட்சைக்கு பதிவு செய்த மாணவர்கள் உங்கள் சுட்டிலக்கங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
- இரசாயன அலை இல 01 - 26.05.2025 அன்று நடைபெறும்.
- பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மாதந்தோறும் நடைபெறும் இரசாயனவியல் செய்முறைகளிலும் கலந்து கொள்ளலாம். (Chemistry practicals)

154A, Navalar Road, Jaffna.
நிருகல்வி நிலையம், கோண்டாவில்.
Tel : 077 555 9028, 077 351 3734
(4007)

**Pearson International College**



- இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
- கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
- எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
- இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA
TESL Ontario
(1009)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

சிற்றுண்டிச்சாலை
(உணவு பரிமாறுபவர் ஆண்கள் மட்டும்)
யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்
தொடர்புகளுக்கு :
077 275 9799
(4016)

**கணக்காளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் தனியார் விற்பனை நிலையம் ஒன்றிற்கு கணக்குத்துறையில் அனுபவம் வாய்ந்த கணக்காளர் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 148 4540
(C-2783)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, சுவாட்ஸ்லேனில் 5 அறைகளுடன் தனித் தனி குளியலறைகளுடன் கூடிய மேல்தளத்தில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.
(அலுவலக பாவனைக்கு உகந்தது)
077 148 4540
(C-2783)

**Village Hotel Bus Booking (A/C Bus)**

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503
(3992)

**விற்பனையாளர் தேவை**

எமது ஜவுளி நிறுவனத்திற்கு O/L - A/L படித்த பெண் பயிலுனர், விற்பனையாளர் தேவை.
சிவகணேசன் TEX
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(4018)

**வேலைவாய்ப்பு**

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurantற்கு வேலையாட்கள் தேவை
076 830 3931
(3992)

**பணியாளர் தேவை**

எமது நிறுவனமான உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவையாக உள்ளது.

- Waiter - (Room Boy) (3 மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது.)
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்
- Bill Clark (3 மொழிகளும் தெரிந்தவர்)
- காவலாளி

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 601 6310, 077 243 1310
(C-2798)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

**மலர் வளையம்**

புத்தம் புதியவை



Small 2500/=
Large 3500/=
ஈ - சன்ஸ்
No.148, Main Street, Jaffna.
021 222 2695, 077 429 0613
(C-2797)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.101, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org